
12-6-59

# முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி. எம்.எல்.ஏ





# மனிதனின் கதை

**பி. சி. கணேசன்**

## 39. புதிய கடல் வழிகள் (பகுதி: 2)

அன்புள்ள மாதவி,

ஜப்பானைத் தேடி கடற் பயணத்தை மேற்கொண்ட கொலம்பஸ், தான் நினைத்துப் பார்த்திராத புதிய இடம் ஒன்றை அடைந்துவிட்டான் என்று சென்ற கடிதத்தில் எழுதினேன் அல்லவா?

ஜப்பான் அதுவல்ல என்பதை கொலம்பஸ் கண்டுகொண்டான். பிறகு அந்த இடம்தான் எது? கொலம்பஸ் தன் யோசனைக்கு எட்டிய வண்ணம் அது இந்தியாவாக இருக்க வேண்டுமென எண்ணினான். அந்த நிலப்பரப்பை மேற்கிந்தியா என்றும், அங்கு வாழும் மக்களைச் செவ்விந்தியர் என்றும் கொலம்பஸ் அழைத்தான். அங்கே சிலமாதங்கள் தங்கியிருந்த பிறகு கொலம்பசும் அவன் குழுவினரும் ஸ்பெயின் நாடு திரும்பினர். வரும்பொழுது தங்கம், பருத்தி, மேற்கிந்தியத் தீவுகளில் வாழும் பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றோடு இரண்டு செவ்விந்தியர்களையும் தனது லட்சியம் நிறைவேறியதன் அடையாளமாக அழைத்து வந்தான்.

கொலம்பஸ் அரச மரியாதைகளோடு ஸ்பானிஷ் மன்னனால் வரவேற்கப்பட்டான் விருந்தும் கேளிக்கைகளும் நடந்தன. புதிய தீவுகளிலே ஸ்பெயினின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த பதினேழு கப்பல்களோடும், ஆயிரத்து ஐந்நூறு மனிதர்களோடும் கொலம்பஸ் இரண்டாம் முறையாக அனுப்பப்பட்டான். மூன்றும் முறையும் கொலம்பஸ் சென்றான்.

மேலும், புதிய காலனிகளில் ஸ்பெயின் நாட்டின் கவர்னராகவே இருந்து அவன் ஆட்சி செய்தான். சீக்கிரமே ஸ்பெயின் மன்னனிடம் அவன் செல்வாக்கிழந்து சிறையில் அடைக்கப்பட்டான்.

மாதவி, கிழக்கத்திய நாடுகளுக்கு வழி காணச் சென்ற கொலம்பஸ் உண்மையில் புதிய கண்டமொன்றையே கண்டுபிடித்தான். ஆனால் அந்த உண்மையை சாகும்வரை அவன் அறியவில்லை! உலகத்தைச் சுற்றி வந்து ஆசியாக் கண்டத்தை அடைந்துவிட்டதாகவே எண்ணி அவன் உயிர் விட்டான்.

ஆனால், அமெரிக்காக் கண்டத்தின் பெரும் நிலப்பரப்பை கொலம்பஸ் அடையவேயில்லை.

அவன் சென்றதெல்லாம் மேற்கிந்தியத் தீவுகளுக்குத்தான். புது உலகம் என அழைக்கப்படும் அமெரிக்காக் கண்டத்தை முதன் முதல் கண்டுபிடித்தவன் அமெரிகோ 'வெஸ்புகி என்ற இத்தாலிய வியாபாரியே!

கொலம்பஸின் சாதனைகளால் ஊக்குவிக்கப்பட்ட அமெரிகோ, வியாபாரத்தையும் கைவிட்டுக் கடல் பிரயாணத்தில் ஈடுபட்டவன்! முதன் முதல் புதிய கண்டத்தைக் கண்டுபிடித்த அவன் பெயராலேயே அந்தக் கண்டம் 'அமெரிக்கா' என அழைக்கப்படுகிறது. பிரேசில் கடற்கரையை 1499-ல் அவன் அடைந்தான்.

கொலம்பசின் சாதனைகள் ஐரோப்பியர்களிடையே கடலாசையை வளர்த்தது. அடுத்த நூற்றுண்டு முழுவதும் கடலாதிக்கம் பெறும் போட்டியில் வல்லரசுகள் முனைந்தன. 1497-ல், வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுக்கீசிய மாலுமி, நன்னம்பிக்கை முனையைத் தாண்டி ஆ:ப்ரிக்காவின் கிழக்குக் கரையை அடைந்து, அங்கிருந்த அராபிய மாலுமி ஒருவனின் உதவியால் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டை வந்து சேர்ந்தான். சில ஆண்டுகளிலேயே வேறு சில போர்ச்சுகீசிய மாலுமிகள் ஜாவா முதலிய கிழக்கிந்தியத் தீவுகளைச் சென்றடைவதில் வெற்றி கண்டனர்.

1519-லிருந்து 1522—வரை, வரலாற்றுச் சிறப்பு மிக்க கடற்பிரயாணம் ஒன்று நிகழ்ந்தது.

ஸ்பெயின் மன்னனின் சேவகத்திலிருந்த போர்ச்சுகீசிய மாலுமியான மெகல்லன் என்பான், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து, தென் அமெரிக்காவின் தெற்கு முனையில் உள்ளதும், புயலும் கொந்தளிப்பும் மிக்கதுமான ஜலசந்தியைத் துணிவுடன் தாண்டி (அந்த ஜலசந்தி இப்பொழுது மெகல்லனின் பெயரால் 'மெகல்லன் ஜலசந்தி' என்றே அழைக்கப்படுகிறது) பசி:பிக் மகா சமுத்திரத்தில் பிரவேசித்தான். மாபெரும் அட்லாண்டிக் கடலைத் தாண்டிய பின் எல்லையற்றுப் பரந்து கிடந்த பசி:பிக் கடல் மெகல்லனைப்பயமுறுத்தவில்லை. மாலுமிகளோடு பயணத்தைத் தொடர்ந்தான். தொண்ணூற்றெட்டு நாட்கள் கரை காணுக் கடலிலே அவர்களுடைய கலங்கள் மிதந்து சென்றன. 1521-ல் சிறிய தீவுக் கூட்டமொன்றை அவர்கள் அடைந்தனர். அங்கே வாழ்ந்த மக்கள், வந்திறங்கிய மாலுமிகளின் பொருள்களை அபகரித்துச் செல்லுவதில் அக்கரை காட்டியதால் அந்தத் தீவுகளுக்கு மெகல்லன் 'திருடர்களின் தீவுகள்' என்று பெயரிட்டு அழைத்தான்.

தொடர்ந்துபிரயாணம்செய்து மெகல்லன் மற்றொரு தீவுக் கூட்டத்தை வந்துசேர்ந்தான். அவைகளுக்கு ஸ்பெயின் மன்னனை :பிலிப்பின் பெயரால் ':பிலிப்பைன்ஸ்' என்று பெயர் வைத்தான். பசி:பிக் கடலிலுள்ள அந்தத் தீவுகளின் இன்றைய நிலையைப்பற்றித்தான் நீ நிறைய அறிவாயே! எதிர்பாரா விதமாக அந்தத் தீவில் வாழ்ந்த மக்களுக்கும் மெகல்லனின் கோஷ்டியாருக்குமிடையே சண்டைமூண்டது.

சண்டையில் மெகல்லனும் அவனுடன் வந்த பல மாலுமிகளும் கொல்லப்பட்டார்கள். எஞ்சியவர்கள் இந்துமகா சமுத்திரத்தின் வழியாக, தென்னுப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு, வடதிசையிலுள்ள ஸ்பெயின் நாட்டை வந்தடைந்தார்கள்.

ஸ்பெயினிலிருந்து மெகல்லனின் தலைமையில் புறப்பட்டுச் சென்ற ஐந்து கப்பல்களில் ஒன்று மட்டுமே திரும்பி வந்தது! மூன்றுண்டுகள் உலகைச் சுற்றி நடந்த இக்கடல் பிரயாணத்தில் ஈடுபட்ட இருநூற்று எண்பது மாலுமிகளில் முப்பத்தொரு பேரே உயிருடன் திரும்பினர்! அவர்களும் மெகல்லனை இழந்து, தலைவனில்லா மாலுமிகளாகவே தாயகம் வந்தடைந்தனர். முதன் முதல் உலகைச் சுற்றியபெருமை மெகல்லன் குழுவினரையே சாரும்!

புதிய கண்டங்களும் கடல் வழிகளும் கண்டு பிடிக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவை. மாலுமிகள் செயல்புரியும் ஆவலில் கடல் பயணம் சென்றனர். ஆனால் பொருளுதவியும் ஆள்பலமும் தந்து அவர்களை ஊக்குவித்த மன்னர்களின் நோக்கமோ வேருக இருந்தது. பிறநாடுகளுடன் செய்துவந்த வியாபாரம் தடைபெருமல் நடைபெற வேண்டுமென அவர்கள் எண்ணினர். போர்ச்சுகலின் நோக்கம் இதுதான். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தென்னமெரிக்காவின் செல்வமனைத்தையும் ஏகபோகமாக அனுபவித்து ஸ்பெயின் வல்லரசாக வளரத் தலைப்பட்டது. போர்ச்சுகலுக்கும் ஸ்பெயினுக்கும் 'புது உலக' உரிமையில் கடும் போட்டி ஏற்படவே, போப்பாண்டவர் தலையிட்டு, போப்பின் எல்லையெனத் தெற்கு வடக்காக ஒரு கோட்டை நிர்ணயம் செய்து, இரண்டு நாடுகளுக்குமிடையே சமரசம் ஏற்படுத்தினர்.

காலம் செல்லச்செல்ல டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், பிரஞ்சுக்காரர்களும் கடல் வழிகளில் ஆதிக்கம் பெறுவதில் அதிகம் ஈடுபட்டனர்.

இதனுல்தான் மாதவி, வல்லரசுகளிடையே பூசல்கள் மலிந்தன. புது உலகச் செல்வத்தைப் போட்டியின்றி அனுபவித்த ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்ட பதினும் பதினேழாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்து முழுமூச்சோடு முனைந்தது.

இதனுல்தான் இங்கிலாந்து கடல் பலம் பெற்று உலகப் பேரரசு நிறுவும் நிலைபெற்றது.


இனிவரும் வரலாறே அதுதானே?

அன்புள்ள,

அகத்தியன்.

### வாழ்த்துகிறேம்!

சுயமரியாதை இயக்கத்திலிருந்து, திராவிடச் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் பலலோரில் ஒருவராகிய புதுக்கோட்டை திரு. இரா. சின்னய்யா அவர்களின்செல்வி தமிழ்க் கொடிக்கும், செம்பனூர்கோவில் திரு. ஏ. எஸ். முத்தையா அவர்களின் புதல்வர் மு. செயராமன் பி. எஸ்ஸி., பி.டி., அவர்களுக்கும் சீருடன் திருமணம் நடைபெற்றது என்ற செய்தியறிந்துமகிழ்கிறேம். 1—6—59 அன்று புதுக்கோட்டை 'அன்பு நிலைய'த்தில் நடைபெற்ற அத்திருமணத்திற்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலைமை வகித்தார்கள்; இயக்கத்தின் முன்னணி வீரர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.




இது பேச்சு... ...இது செயல்!




வெள்ளி 12—6—59 சென்னை

# சுதந்திரச் சிங்கை!

ஆமையாக அடங்கி வாழ்வதைவிட—அடிமையாக முடங்கிக் கிடப்பதைவிட — ஒருக் கணமேனும், "பொறுக்க மாட்டோம் உனது தலைமையை! அறுத்தெறிவோம் அடிமைச் சங்கிலியை!" என்று அறைகூவல் விடுத்துச் சாவதே மேல் என்று சொன்னவர்களுக்குச் சமுதாயம் தலை வணங்கத்தான் செய்திருக்கிறது! விடுதலை கோருகின்ற வாயைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள் - வெற்றி வாகை சூட வேண்டிய மார்பைப் பிளந்து போட்டிருக்கிறார்கள்—இருந்தும் கொடிய தியாக வரலாற்றை இரத்தத்திலே தோய்த்துத் திமிரோடு எழுதிய கரங்கள்தான், பின்னால் விடுதலைப் பத்திரத்தையும் எழுதியிருக்கின்றன; வாழ்த்துக்களோடு!

அறிவுப் புரட்சியும், விடுதலைக் கிளர்ச்சியும் கிளர்த்தெழுந்து விட்ட இந்த நாளில் அடுக்கடுக்காக வெற்றிக் கதைகள்—விடுதலைச் செய்திகள் குவிந்துகொண்டேயிருக்கின்றன!

அந்தப் பட்டியலிலே உலகத்தின் கவனத்தை-விடுதலைப் பித்தர்களின் ஏகப் பார்வையை இப்போது கவர்ந்திருக்கிறது, நம் பக்கத்திலேயிருக்கிற சிங்கப்பூர்!

"உன் விடுதலை உணர்ச்சியும், வீறுகொண்ட எழுச்சியும் என் காலணிக்குத்தான் ஈடு!" எனச் சொல்லி, ஒரு 'காலனி' நாடாகத் தன் காலடியில் அழுத்திக்கொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்தியம், இன்று விடைபெற்றுவிட்டது, அங்கிருந்து! நூற்று நாற்பது ஆண்டு கால அடிமை வாழ்வு அஸ்தமித்துவிட்டது! எத்தர்கள் மிரண்டோட, புத்தழகுப் பெற்று, புதுப் பண்பாடி பவனி வருகிறார்கள், அங்கு வசிக்கின்ற 15 இலட்சம் மக்களும்!

அதுமட்டுமேல்ல; அந்த வெற்றி பூமி மற்றுமொரு களிப்பூட்டும் செய்தியையும் இந்த அவனிக்குத் தருகிறது!

அந்த சுய ஆட்சி உரிமைகொண்ட நாட்டிலே முதன்முதலில் அரசோச்சும் வாய்ப்பினைப் பெற்றிருப்பவர்கள், சென்ற திங்கள் நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றிருக்கும், மக்கள் கட்சியினராகும்!

வியக்கத்தக்க விதத்திலே 90 சத விகிதம் வாக்குகள் பதிவு செய்யப்பட்ட அந்தத் தேர்தலில், 12 அரசியல் கட்சிகள் போட்டியிட்டன. வெற்றி பெற்ற மக்கள் கட்சிக்கு எதிராக மீதியுள்ள 11 கட்சிகளும் போராடின. ஆனாலும், அத்தனையையும் முறியடித்து வெற்றிவாகை சூடிவிட்டார்கள், அந்தப் புதியவர்கள்!

விரிந்த மனப்போக்கும், வெற்றிக்கு மட்டும் திட்டமிட வேண்டுமென்ற ஆர்வமும் கொண்டவர்கள், அந்தப் புதுமைப் பிரியர்கள்!

வயதிலே வாலிபர்கள்தான்; ஆனால் செயலிலே மறுமலர்ச்சி காணவேண்டுமென்ற ஆசைகொண்டவர்கள்!

அந்த மக்கள் கட்சியின் தலைவர்களில் எட்டு பேர் 1955-ம் ஆண்டிலிருந்து சிறையிலே வாடுகிறார்கள். அவர்களைப் பிடித்தடைத்திருந்த லிம்—யூ—காக்கின் கட்சி இன்று மாபெரும் தோல்வியைக் கண்டது! 51 இடங்களில் 43 இடங்களைக் கைபபற்றி மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்ட இடதுசாரி மக்கள் கட்சி, வெற்றி பெற்றவுடனேயே தங்கள் தோழர்களை சிறையிலிருந்து விடுதலை பெறச் செய்திருக்கிறார்கள். அதன் பிறகுதான் வெற்றி விழா கொண்டாடி மந்திரி சபையையும் அமைத்திருக்கிறார்கள்!

வாலிபர்கள் என்ன சாதித்து விடமுடியும் என்கிற வயோதிகத் திமிர் பிடித்தவர்களுக்கு அந்த வெற்றி வீரர்களின் முகாம் நல்ல பதிலைத்தான் தந்திருககிறது!

அந்த இயக்கத்தின் தலைவராகிய டாக்டர் டோ சின் கியே என்பவரின் வயது 37 தான்!

பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றிருப்பவரான ஜெனரல் லீ க்வான் யூ என்பவரின் வயது 36 தான்!

அமைச்சரவையிலே இருக்கின்ற மற்ற அத்தனை பேரும் அந்த இருவரையும்விட வயதில் மிக மிகக் குறைந்தவர்கள்தானாம்! வாலிபர்கள் அமைத்திருக்கிற இந்த அமைச்சரவையின் முதல் திட்டமே அந்த நாட்டுக்குத் தேவையான முக்கியமான திட்டமாகும்!

சிங்கப்பூரிலே குடியேறியவர்கள்தான் அதிகம்; மூன்றில் இரு பங்கு எண்ணிக்கையினர் சீனர்களேயாகும்; இருந்தாலும் அவர்களிடையே பரவியிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடுவதுதான் அரசு எடுத்துக் கொள்ளப் போகிற முதற் பணியாகுமாம்! தேர்தல் காலத்தில மக்கள் மன்றத்தின் முன்னே இந்த உறுதிமொழியைத்தான் வைத்தது, மக்கள் கட்சி! நம்பி ஓட்டளித்த மக்களுக்கு துரோகம் செய்யாத தூய பண்புடன் தங்களது தலையாய கடமையாக அதையே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாது திண்டாடித் திரிகின்ற இலட்சக் கணக்கான இளைஞர்கள் அவர்களது வியப்பூட்டும் புதிய திட்டம் என்ன என்பதை மலர்ந்த முகத்தோடு எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்!

அந்த வெற்றி வீரர்களது சாதனையைப் போற்றுகின்ற நாம், ஒருக்கணம் நம்முடைய நிலையையும் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது. தாயகத்தை மீட்கவும், தனியரசு காணவும், தடை பல உடைத்து இன்று இலட்சிய முகடை அடைந்துவிட்ட அவர்களது வரலாறு நம்மை ஆளுகின்ற டெல்லி ஏகாதிபத்தியவாதிகளுக்கு நல்லதொரு பாடமாக அமையவேண்டும்.

15 இலட்சம் மக்களைக் கொண்ட அந்த நாடு இன்று தனிக்கொடி உயர்த்துகிறது; தனக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டுகிறது; பார் மெச்சப் புகழோடு வாழ முடியும் என்று மார் தட்டுகிறது!

ஒன்பது கோடி மக்களைக் கொண்ட திராவிடம் தனியாக வாழ முடியாது என்று சொல்கிறவர்கள்—இனத்தாலும், மொழியாலும், பண்பாலும், கலாச்சாரத்தாலும் வேறுபட்டவர்களை அடிமையாகத்தான் வாழச் செய்வோம் என்று கொக்கரிப்பவர்கள்—'சிங்கப்பூரின்' பக்கம் பார்வையைச் செலுத்த வேண்டும்!

அந்தப் புதிய அரசில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்குமாம்; ஆனால் பாராளு மன்ற உரையாடல்களில் ஆங்கிலத்தோடு மலாய் மொழி, சீனமொழி, மற்றும் தமிழ் மொழியையும் கையாளலாம் என்றும் திட்டம் தந்திருக்கிறார்கள். மிகச் சிறுபான்மையினராக அங்கு தமிழர்கள் வசித்தபோதிலும் மக்கள் கட்சியினர் அந்த இனத்திற்குத் தந்திருக்கிற மதிப்பை நாம் வரவேற்கிறோம்! அதோடு விடுதலை பெற்ற நாட்டின் முதல், அமைச்சரவையில் வீற்றிருக்கிற இளைஞர்கள் அந்த நாட்டின் எதிர்கால ஏற்றத்திற்கு நல்லவை எண்ணற்றவை செய்ய வேண்டுமென்றும் வாழ்த்துகிறோம்!

ஃ



பேனா ஓவியம்... [அடுத்த பக்கம்]



# முந்திரா - மிகவும் நல்லவர்!

அது ஒரு செல்வச் சுரங்கம்! கண்பட்ட இடமெல்லாம் கதிரவனின் ஒளியையே வெட்கித் தலை கவிழ்த்துப் போடும் வைரமணிக் கற்கள்! அள்ள அள்ளக் குறையாத தங்கக் குவியல்கள், கோபுரம்போல!

கள்வர் குகையென்று கருதி விடாதீர்கள்! உழைப்பவன் சிந்திய கண்ணீரும் வியர்வையும் தான் உருமாறியிருக்கின்றன! அவன் கொட்டிய ரத்தத்தின் கட்டிகள்தான் செம்பவளக் கற்களாக மாறிவிட்டன!

—அந்தோ, கொடுமை! அதற்குள்ளே திருடன் ஒருவன் புகுந்து விட்டான்; கன்னங்கரிய இருளில் கன்னக்கோல் ஏந்தி, பூனையைப்போல் கால் வைத்து நடக்கிறான், அந்தப் பெருஞ் செல்வத்தைக் கொள்ளையிட நினைத்து!

ஆனால், அந்தக் கொடியவனின் நுழைவை பக்கத்தில் நடை போட்டுக் கொண்டிருந்த காவலாளி கண்டு விட்டான்; ஒரு கையில் விளக்கெடுத்து, மறு கையில் வாள் பிடித்து, அந்தத் திருடனின் தலையைத் திருகிப் போட உள்ளே பாய்கிறான்!

'அகப்பட்டேன்; இனி மீள்வதற்கு வழியற்றேன்' என்று நடுங்கிய கள்வனோ ஓடவில்லை; தப்ப வழி தேடவில்லை; புதிய பாணம் ஒன்றைத் தொடுத்தான், அந்தக் கோப உருக்கொண்ட காவலாளியின்மீது!

"இருக்கும் செல்வமனைத்தையும் நான் எடுத்துச் செல்கிறேன்! என்னை வழிமறிக்காது போக விட்டால், அதிலே ஒரு பகுதி உனக்குத் தருகிறேன், தோழா!" என்கிறான்!

இறுதியிலே கள்வன் செல்வனானான்; காவலாளி துரோகியானான்!

—இது கதைதான்! இப்படி துரோகத்தின் துணையோடு தூய்மைக்குச் சமாதி கட்டியவர்கள் கற்பனைக் கதாபாத்திரங்களாகத்தான் இருக்க முடியும் என்று கூறி விடாதீர்கள்! அத்தகைய மனித உருக்கொண்ட மதோன்மத்தர்கள் — சமுதாயத்தின் அபாய விளக்குகள்—அப்போதைக்கப்போது தோன்றி மறையும் 'மண்' ஒன்று இருக்கிறது இந்த அகிலத்தில்—அந்தக் கேவலத்தை வெட்கத்தோடு சொல்லிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது, இந்த இந்திய உபகண்டம்தான் அந்த இழிதகைப் பண்பினரை வாழ விடுகிறது; வளர விடுகிறது; 'வருக, வருக' என்று கரம்கூப்பி வரவேற்கிறது!

அந்த நீதி கொல்லும் பரம்பரையில் வந்த ஒருவரைத்தான் படத்திலே பார்க்கிறீர்கள்!

இவரை 'முந்திரா' என்று பெயர் சூட்டி அழைத்தார்கள் பெற்றவர்கள்—இன்று அவர் பெயரைச் சொல்ல பாரதமே கூசுகிறது; நல்லவர்கள் நாவெல்லாம் நடுங்குகிறது! அந்த கௌரவமான கொள்ளைக்காரருக்குப் பெயர்சூட்ட அகராதியிலே கீழ்த்தரமான சொற்களைத் தேடிப் பார்த்து ஏமாந்தனர், ஆத்திரத்தால் குதித்தெழுந்தவர்கள்!

'முந்திரா ஊழல்' இன்று பாரதத்திற்கு மட்டுமல்ல; பார் முழுதும் தெரிந்துவிட்ட பயங்கரமான கொள்ளைக்கதை!

ஆனால், அந்தக் கதையை எழுதக் காரணமாக இருந்தவர்கள்—தாள் எடுத்து விரித்து — எழுதுகோல் தூக்கிக் கொடுத்து "தொடங்கு உன் துரோகச் சரித்திரத்தை" என்று தூண்டி விட்டவர்கள்—மக்கள் மன்றம் திறந்த 'நெற்றிக் கண்'ணிலிருந்து இன்று காப்பாற்றப்படுகிறார்கள் என்கிறபோதுதான் 'முந்திராக்களே நல்லவர்கள்' என்ற முடிவுக்கு வருகிறது, இந்த நாடு!

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிதியில் 127 இலட்சம் ரூபாய்கள் மோசடிக்கு இலக்காகிவிட்டன! பணமுதலையான முந்திராவுக்குச் சொந்தமான ஆறு கம்பெனிகளில பங்கெடுக்க இந்தப்பெரும் தொகை பலியிடப்பட்டது!

முந்திரா குற்றவாளிதான்; ஆனால் இந்தக் குற்றவாளியை வரவேற்று, பணத்தைக் கொட்டிக் கொடுத்தது யார்?

அரசாங்க கஜானா அறையிலே கொள்ளைக்காரன் புகுந்தான்; அந்தக் கொள்ளைக்காரனுக்கு வலக் கரமாகி—வாரி வழங்கினார்களே செல்வத்தை-அந்தக் காவலாளிகள் யார்?

இந்த ஊழலுக்கு உறுதுணையாக இருந்தவர்களைக் கண்டு பிடிக்கத்தான் விசாரணை குழுக்களை அமைத்தது, அரசாங்கம்! ஆனால், அந்தச் செயலும் வெறும் கண் துடைப்புத்தான் என்பதை நிரூபித்து விட்டது, அரசினரின் இன்றைய நடவடிக்கை!

"இந்த ஊழலுக்குக் காரணம் தனிப்பட்டவர்களின் விருப்பம்தான்! குறிப்பாக, முந்திராவுக்குப் பண உதவி செய்ய வேண்டுமே என்பதற்காகத்தான் இந்த விபரீத நடவடிக்கைகளில் இறங்கி விட்டார்கள், அதிகாரிகள்! கார்ப்பரேஷனுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குச் சிறிதும் கிடையாது!"

—இப்படித் தீர்ப்பளித்தது சக்ளா குழு. பம்பாய் மாநிலத்தின் தலைமை நீதிபதியாக இருந்தவர் அந்த சக்ளா; இன்று அமெரிக்காவிலே இந்தியத் தூதுவராக இருக்கிறார். அவர் சொன்னார், அரசாங்க அதிகாரிகள் தங்கள் சொந்த விருப்பத்திற்கிணங்கவே இந்தக் கொடுமைக்கு வித்திட்டார்கள்—என்று!

அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டிருந்தால், முந்திராவின் வழக்கை விசாரிப்பதற்கு முன்னால், குற்றக் கூண்டிலே நிறுத்தியிருக்க வேண்டும் மக்களாட்சியிலேயே இந்த மாபாதகச் செயல்களுக்கு வித்திட்டு விட்ட அதிகாரிகளை!

நிதி இலாக்காவின் தலைமைச் செயலாளராக இருந்த படேல், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் தலைவர் காமத், நிர்வாக டைரக்டர் வைத்தியநாதன் — இம் மூவரும்தான் இந்தப் படுமோசத்திற்குக் காரண 'பூதங்கள்' என்று கருதியது நாடு!

ஆனால் அரசாங்கம் முன்னாள் நீதிபதியான விவியன் போசின் தலைமையில் மற்றுமொரு குழுவை நியமித்தது. அப்போதுதான் நெஞ்சுலுக்கும் மற்றொரு உண்மையும் வெளிப்பட்டது!

முந்திரா என்ற மோசக்காரனிடமிருந்து ஆளும் கட்சி இரண்டரை லட்சம் ரூபாய்களை நன்கொடையாகப் பெற்றது!

இதயமற்றவனின் இரும்புப் பெட்டியின் கதவு திறக்கப்படுகிறது என்றால்—அதிலே துருப்பிடித்துக் கிடக்கும் வெள்ளிக் காசுகள் பவனி புறப்படுகின்றன என்றால் — அதன் பாதையிலே நீதி வெட்டி வீழ்த்தப்படுகிறது என்றுதானே பொருள்!

அது போலவே, முந்திராவின் இரும்புப் பெட்டியிலிருந்து இரண்டரை இலட்சத்தை எடுத்துக்கொண்டு, ஈடாக ஒன்றே கால் கோடியைக் கொட்டிக் கொடுத்தார்கள்!

"படேலும், காமத்தும், வைத்தியநாதனும் கடமை தவறினார்கள்! பதவியைக் கொண்டு பாழான வழியில் பயணம் நடத்தினார்கள்! நன்கொடையைப் பெற்றுக் கொண்டு நாசச் செயலுக்குத் துணை நின்றார்கள்!"

—இப்படித்தான் தீர்ப்பளித்தது, விவியன் போஸ் குழு!

ஆனால் இந்த முடிவுகள் எந்த அளவுக்கு இன்று மதிக்கப்படுகின்றன, அரசாங்கத்தால்?

படேலையும், காமத்தையும், வைத்தியநாதனையும் "பதிலென்ன?" என்று கேட்டதா?

இல்லை, இல்லை!

* படேலின் மீதிருந்த குற்றச்சாட்டு கைவிடப்பட்டது!
* காமத் வெறும் எச்சரிக்கையோடு விடப்பட்டார்!
* மூன்றாவது நபரான வைத்தியநாதனின்மேல் நடவடிக்கை எடுப்பதா; இல்லையா என்பதுபற்றி இனிமேல்தான் முடிவு எடுக்கப்படும்!

— இப்படித்தான் முடிந்து விட்டது முந்திரா தீட்டிய சோகக் கதையின் இறுதி!

இரு வருடக் குழந்தைதான் அரசாங்கம் பெற்றெடுத்த இந்த 'ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்' நிறுவனம்! அதன் உடலிலே ஓடுகின்ற இரத்தம் இந்த நாட்டு ஏழைப் பாலிசிதாரர்களின் உழைப்பு! அந்தக் குழந்தையைத்தான் இரத்த வெறி கொண்ட முந்திரா என்ற ஓநாயின் வாயிலே திணித்து விட்டார்கள், அதிகாரத்தின் காவலர்கள்!

இன்று அவர்கள் மன்னிக்கப்படக்கூட இல்லை; மதிக்கப்படுகிறார்கள்! அந்தோ...கொடுமையிலும் கொடுமை.......முந்திரா மிகவும் நல்லவராகிவிட்டார்!

—சொர்ணம்



சென்ற 22—5—59 அன்று திருக்குவளைக்கு வருகை தந்திருந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பு ஒன்று வாசித்து அளிக்கப்பட்டது. படத்தில் திரு. நடராச (தேவர்) அவர்கள் வரவேற்பிதழை அளிப்பதையும், திரு. கோவிந்தராசு அவர்கள் மாலை அணிவிப்பதையும் காணலாம். இடது கோடியில் திருவாரூர் திரு. ராசசந்தானம் அவர்களும், வலது கோடியில் திருக்குவளை திரு. சோமாஸ்கந்தம் (பிள்ளை) அவர்களும் அமர்ந்திருக்கிறார்கள்.

# திருக்குவளையில் "முத்துவேலர் - அஞ்சுகம்" மருத்துவமனை திறப்பு விழா!

★

அந்தச் சிறிய கிராமம் அன்றைய தினம் விழாக் கோலம் பூண்டிருந்தது. கழகக் கொடிகள் உயரே பறக்க — மேளதாளம் முழங்க கிராமத்தின் தெருக்களில் ஊர்வலமும் நடைபெற்றது! கிராமத்து மக்கள் தங்களது வாழ்க்கையிலேயே கண்டிராத புதிய காட்சி ஒன்றை வியப்புடன் கவனித்தார்கள், அன்று!

அந்தச் சிறு கிராமத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை ஒன்று துவங்கப்படுகிறது என்பதுடன், அக் கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் தங்கள் நலனுக்கென 'தாய் சேய் நலவிடுதி' ஒன்றினைப் பெறுவதற்கான வாய்ப்பைத்தந்த நாளாகும் அது!

திருவாரூரிலிருந்து 12 கல் தொலைவிலுள்ள அந்தக் கிராமந்தான் தோழர் மு. கருணாநிதியும், மாறனும் பிறந்த ஊராகும். அது அதிகப் பொலிவு பெற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத் தாய் சேய் நலவிடுதி ஒன்றைக் கட்டித் தருகின்ற பொறுப்பை அவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

சுமார் 6,000 ரூபாய்வரை திட்டமிடப் பட்டிருக்கின்ற அந்த மனைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய தினம் தமக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட வெள்ளிக்கரணையின் உதவியால் அடிக்கல் நாட்டினார்கள்.

அந்த கிராமத்து மக்களிடையே இன்று தோன்றியிருக்கின்ற பகுத்தறிவுச் சுடருக்கு அறிவியக்கத்தின் வளருகின்ற வெற்றிதான் காரணம் என்று அண்ணா குறிப்பிட்டார்கள். பிறந்த இடத்திற்குப் பெருமைத் தேடித் தருகின்ற வள்ளல் தன்மை வரவேற்கத் தக்கது—என்றும் பாராட்டினார்கள்.

விழாவுக்கு வெங்கடங்கால் சந்தானம் அவர்கள் தலைமை வகித்தார்கள். நன்கொடையாளர்களையும் — திருக்குவளை பொது மக்களையும் பாராட்டி, மன்னை ப. நாராயணசாமி, பேராவூரணி கு. அடைக்கலம், திருச்சி எம். எஸ். மணி, அன்பில் தர்மலிங்கம், கருணானந்தம், கோ. செங்குட்டுவன், காட்டூர் இராமையா—ஆகியோர் பேசினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டிய பிறகு கிராமத்து முக்கியமானவர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம்தான் பக்கத்திலிருப்பது.




காங்கிரஸ்: என்னப்பா திராவிட முன்னேற்றக் கழகம்! என்ன; என்னைக் கண்டும் காணாதவன்போல் நகர்கிறாய்; வெட்கமா?

தி. மு. க: வெட்கம் எனக்கேன் வருகிறது? வெறுப்பாகத்தான் இருக்கும், காரணம் என்று ஒன்றிருந்தால்! உன்னை நான் சரியாக கவனிக்கவில்லை; அவ்வளவுதான்!

# தோற்றவர் 'தொகையறா'!

காங்: கண் என்ன பிடரியிலா இருக்கிறது?

தி. மு. க: கண், காது, மூக்கு எல்லாமே இருக்கிற இடங்களில்தான் இருக்கின்றன. ஆனால், உன் உடம்பில்தான் இல்லாதவை எல்லாம் திடீரென்று இடம் பெற்றிருக்கின்றன. மார்பிலே மூவண்ண பேட்ஜ், தலையிலே காந்தி குல்லாய், புதிய கதர் உடுப்பு — என்னப்பா இதெல்லாம்? அடையாளமே தெரியவில்லையே!

காங்: ஆமாம்; ஆமாம்! நான் மட்டுமா? சென்னையிலேயே எத்தனையோ பேர் இப்படித்தான் புதிதாக உடையெல்லாம் அணிந்து கொண்டு விட்டார்கள்! தெரியாதா, உனக்கு? தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலே சென்னை ஜில்லா அரசியல் மகாநாடு நடைபெற்றதே!

தி. மு. க: ஓகோ! அதிருக்கட்டும்; ஆள்தான் மாறிவிட்டாய்; உன் குரல் ஏன் இப்படி மாறிக் கிடக்கிறது?

காங்: கம்மி விட்டதப்பா! ஊர்வலத்தில் முழங்கிய முழக்கம்—இப்படி முடிந்து விட்டது!

தி. மு. க: ஊர்வலத்தில் முழக்கம் வேறு செய்தாயா? 'காங்கிரஸ் வாழ்க!...நேருஜி வாழ்க! பஞ்சசீலம் ஓங்குக! தலாய்லாமா வருக!' — இப்படியெல்லாம் கர்ஜித்திருப்பாய்!

காங்: உம்......அதெல்லாம் இப்போது ஏன்? "பிரிவினைவாதிகள் ஒழிக! தேசத் துரோகிகள் ஒழிக! நாச சக்தியை...... பூண்டோடு அழிப்போம்!" இப்படித்தான் கத்தினேன் — தெரியுமா?

தி. மு. க: ஓகோ!...

காங்: அதுவும் மவுண்ட்ரோடு பக்கம் ஊர்வலம் செல்லும் போது, கண்ணிலே இருவண்ணக் கொடிகள் பட்ட நேரத்தில் கத்தியிருக்கிறேன் பார்....

தி. மு. க: சொன்னார்கள்; சொன்னார்கள்! வரிசையாக இருக்கிற தி. மு. கழக ஏடுகளின் அலுவலகங்களின் வாசலில் நகராமல் நின்று விட்டீர்களாமே! "கண்ணீர்த் துளிகளை..........விரட்டுவோம்!" "தி. மு. க. ஏடுகளை... கிழித்தெறிவோம்!" என்றெல்லாம்கூட முழங்கி ஜனநாயகத்தைக் காப்பாற்றினீர்களாமே?

காங்: பின்னே என்ன; மகாநாட்டில்கூட சும்மாவா விட்டோம்?

தி. மு. க: ஏன்; கனல் கக்கும் தீர்மானங்கள் போட்டீர்களா? அல்லது பலன்தரும் திட்டங்கள் தீட்டினீர்களா?

காங்: புத்தி தீட்சண்யமான பேச்சுகளைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அடடா...எங்கள் செங்கல்வராயன் சொன்னார், இந்த மாபெரும் மகாநாட்டை நகரசபைத் தேர்தலுக்கு முன்னால் கூட்டியிருந்தால், தேர்தல் முடிவே வேறுமாதிரியாகப் போயிருக்கும்—என்று.

தி. மு. க: அதாவது...?

காங்: தேர்தலுக்கு முன்னால் மாநாட்டை நடத்தியிருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு 'சீட்டு'கூட வாங்கியிருக்க முடியாது!

தி. மு. க: ஏன்; மாநாட்டிலே 'மெஸ்மரிச' வித்தை நடத்தி, வந்திருந்தவர்களின் மனதை எல்லாம்மாற்றியிருப்பார்களா? அப்படியானால் காந்தியாரின் சீடர்கள் இனிமேல் எந்தத் தேர்தலைப் பற்றியும் கவலையே படத் தேவையில்லையே! தேர்தலுக்கு முன்னால் ஒரு மகாநாடு; ஒரு ஊர்வலம்; நாலு தலைவர்கள்; இந்திரா காந்தி—இவை போதுமே தேர்தலில் வெற்றிபெற! எதற்காக போஸ்டர்கள்? எதற்காக மூலைக்கு மூலை கூட்டங்கள்? எதற்காக இலட்சக் கணக்கான ரூபாய் செலவு? செங்கல்வராயனின் அருமையான இந்தத் திட்டத்தை அடுத்த பொதுத் தேர்தலில் கடைப் பிடித்துப் பாருங்களேன்! ஒரு எதிர்க் கட்சிக்காரன் தலை தூக்க முடியுமா?

காங்: தூக்கினால்தான் என்ன? அதற்கும் காரணம் இல்லாமலா தூக்குகிறார்கள்?


தி. மு. க: ஏன்; அவர்களும் மாநாடு போட்டுத்தான் தலையைத் தூக்குகிறார்களா?

காங்: அதெல்லாமில்லை; இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை நகரசபையில் நிர்வாகம் செய்கிறதே; அதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா; உனக்கு?

தி. மு. க: காரணமா? 45-ம் 37-ம்!

[தொடர்ச்சி பக்கம்—10]






# 4

புகார் நகருக்கு வெகு தொலைவிலுள்ள காட்டு வழியொன்றில் அடியார் கூட்டம் வேகமாக நுழைந்தது. செழியனைக் கட்டியுள்ள அன்னக்காவடியைத் தூக்க முடியாமல் ஆள்மாற்றி மாற்றித் தூக்கித் தோளெல்லாம் வீங்கிவிடவே காட்டு வழியில் நுழைந்ததும் நுழையாததுமாக எல்லோரும் களைப்பாறுவதற்காக உட்கார்ந்து கொண்டார்கள்.

அன்னக்காவடியிலிருந்த செழியனும் மயக்கந் தெளிந்து அசைய ஆரம்பித்தான். அந்த அசைவு கண்டு அடியார்கள் அச்சங் கொண்டனர். வாளை உருவித் தயாராக நின்றுகொண்டனர். இருவர் அருகே சென்று அன்னக் காவடிக்குள் முடங்கிக் கிடந்த செழியனை வெளியே தூக்கினர். உடனே இருவர் தயாராக வைத்திருந்த விலங்குகளைக் கையிலும் காலிலும் மாட்டினர். செழியன், ஒன்றும் விளங்காமல் விழித்தான். அடியார்களை உற்றுப் பார்த்தான். அவர்களுக்கு இப்போது பயம் தெளிந்து விட்டது. சோழனின் தலைநகரை விட்டு வெகு தூரம் வந்து விட்டோம் என்ற துணிவில் தங்கள் மாறு வேடங்களைக் கலைத்தனர். செழியனுக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அவர்கள் இருங்கோவேளின் ஆட்கள்தான்!

என்ன செய்ய முடியும்? காலும் கரமும் கட்டப்பட்ட நிலையில் எட்டிய மட்டும் விழிகளைச் செலுத்தினான். எட்டாத தொலைவுக்கு நினைவுகளை அலைய விட்டான். பறக்கவிடப்பட்ட காற்றாடி எவ்வளவு தூரம் சென்று பறந்தாலும் கயிற்றின் நுனியிருக்குமிடத்திற்குத்தானே கடைசியில் வந்து சேர வேண்டும்? அதுபோலவே எங்கெங்கோ பறந்து சென்ற எண்ணங்கள் இறுதியில் அவனுக்குள்ளேயே வந்து சுற்றிக் கொண்டன.

இருங்கோவேளின் வீரர்களிடமிருந்து தான் தப்புவது ஒன்றுதான் உடனடியாக நடக்க வேண்டிய காரியம் என்று, தீர்மானித்தான். ஆனால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வழி? எங்கும் இருள்! அதுகூட அவனுக்குச் சாதகமான சூழ்நிலைதான். ஓடினால் யாராலும் துரத்திக்கொண்டு தொடர முடியாது. ஆனாலும் தப்ப வேண்டுமே! அதற்கு என்ன செய்வது? அந்த வெறி பிடித்த முகம் படைத்த வீரர்களோடு பேசிப் பார்ப்போம் என்று தோன்றியது அவனுக்கு! பேசத் தொடங்கினான்

"யார் நீங்கள்?"—இது அவன் முதல் கேள்வி.

"எங்களைத் தெரியவில்லையா? பகைவர்களைப் பழிவாங்கும் பட்டாளம்!"—இறுமாப்புடன் விடை கிளம்பியது.

"இப்போது என்னை எங்கு அழைத்துச் செல்லுகிறீர்கள்?"

"அழைத்தா செல்கிறோம்; அட முட்டாளே! உன்னை அழைத்துப் போகவில்லை. இழுத்துப் போகிறோம்; இருங்கோவேள் மன்னரிடம்!"

"இருங்கோவேள்! அவர் இன்னுமா மன்னர்? இருக்கிறாரா உயிரோடு? புறமுதுகு காட்டிய அவமானத்தில் தற்கொலை செய்து கொண்டார் என்றல்லவா கேள்விப்பட்டேன்!"

"என்ன ஆணவம் இவனுக்கு!" ஒரு வீரன் கர்ச்சனை செய்தான்.

## "சாவூருக்குப் போகும் வழி"

"வாயைக் கிழியுங்கள்!"—இன்னொரு வீரன் கத்தினான்.

"நாக்கை நறுக்கி எறியுங்கள்!"—ஒரு வீரன் கத்தியோடு பாய்ந்து வந்தான்.

அந்த முழக்கங்கள் எதுவும் செழியனை இம்மியளவு அச்சத்திற்கும் ஆளாக்கவில்லை. அவர்கள் ஆவேசக் கூச்சலை யெழுப்ப யெழுப்ப சிங்கம்போல் நிமிர்ந்து நின்றான். போர் முரசு ஒலிக்கும்போது அறுந்து விழும் கரத்தைக்கூடக் கவனிக்காமல் எதிரிகளின் மீது பாய்கின்ற வீரக்குணம் படைத்த மறவர் மரபிலே வந்தவன் அந்த மாவீரன் என்பதற்கு அடையாளமாக மார்பை உயர்த்தி மலையென நின்ற காட்சி சூழ்ந்து நின்ற வீரர்களுக்குத் திகைப்பை ஏற்படுத்தியது.

அவர்களில் ஒருவன் செழியனிடம் நெருங்கி வந்து, "தம்பீ! நீ பாண்டிய நாட்டுக்குள்ளே பெரிய வீரனாக இருக்கலாம்; ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரைபோல! இங்கே வால் நீட்டாதே! கரிகால் சோழனிடம் வேளிர் குடியினராகிய நாங்கள் நாட்டைத்தான் பறிகொடுத்திருக்கிறோம். வீரத்தையும், மானத்தையும், வெம்பகை முடிக்கும் திறத்தையும் இன்னும் பறிகொடுத்துவிடவில்லை. அவனைப் பழிவாங்காமல் விடப் போவதுமில்லை. இன்றைக்கே முடிந்திருக்க வேண்டிய காரியம்; நீ தலையிட்டுக் கெடுத்துவிட்டாய்!" என்று கம்பீரமாக வார்த்தைகளை உதிர்த்தான்.

செழியன், அவனைப் பார்த்து, "ஓகோ, புறமிருந்து பகையை வளைக்கும் திறத்தை யாரிடம் கற்றீர்? இந்நாட்டுக்குச் சொந்தமில்லாத அந்தத் திறத்தை உமக்கு விற்றவர் யார்? சோழப் பெரு நாட்டின் தங்கம் கரிகால் பெருவளத்தானை என் கண் எதிரே கொல்லுவீர்கள்; அதை நான் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமோ? பிறகேன் எனக்குக் கையிலே வேல், கட்கம், கட்டாரி யெல்லாம்?" என்று உறுமினான்.

"இவனோடு என்ன பேச்சு? இழுத்து வாருங்கள்!" என்று ஒருவன் கரகரத்த குரலில் ஊளையிட்டான். ஒருவன், செழியன் மீது காரித் துப்புவதற்கு முன்னே ஓடினான். அவனைப் பிடித்து இன்னொருவன் இழுத்துப் புறம் விடுத்தான்.

காட்டுப் பாதையில் அவனை கால், கை விலங்குகளோடு இழுத்துச் சென்றனர். ஒரே வெறிக் கூத்து! விரோதி யொருவன் பிடிபட்டான் என்ற மகிழ்ச்சி ஆட்டம்! நடுக் காட்டுக்குள்ளே அந்தக் கூட்டம் நுழைந்தது. அதன் ஆட்ட பாட்ட ஒலியில் காட்டு மிருகங்கள் கூட ஓடி ஒளிந்தன. பறவைகள் அமைதியிழந்து மரக்கிளைகளிலேயிருந்து சிறகடித்து மேலெழும்பி மீண்டும் அமர்ந்தன. கூட்டத்தின் ஆர்ப்பாட்டம் திடீரென அடங்கியது. எல்லோரும் திடுக்கிட்டு எதிரே பார்த்தார்கள். இருளைக் கிழித்துக்கொண்டு ஒரு தீவட்டி வெளிச்சம் அவர்களை நோக்கி மிக வேகமாக வந்துகொண்டிருந்தது. செழியனும் வீரர்களும் அசையாமல் நின்றனர்.

வந்த வெளிச்சம், அவர்களுக்கெதிரே வந்து சற்று தொலைவில் நின்றது. குதிரையில் ஒரு வீரன் தீவட்டியோடு அமர்ந்திருக்கிறான் என்பது மட்டுமே செழியனுக்குத் தெரிந்தது. அவன் யார்? எந்த நாட்டு வீரன்—என்பதொன்றும் அவனுக்குப் புரியவில்லை.

தீவட்டியோடு வந்த வீரன், "பகை! பகை! பகை!" என்று மூன்று முறை கூவினான்.

உடனே செழியனை இழுத்து வந்த வீரர்கள், "தூள்! தூள்! தூள்!" என்று பதிலுக்குக் கூவினார்கள். தீவட்டி வீரன் அதன் பிறகு அருகே வந்தான். செழியனுக்கு இப்போது விஷயம் புரிந்து விட்டது. இருங்கோவேளும் அவனது எஞ்சிய படை வீரர்களும் இந்தக் காட்டிலேதான் உலவிக்கொண்டிருக்க வேண்டும். வேறு யாராவது எதிரிகள் வந்தால் அறிவிப்பதற்காகத்தான் தீவட்டி வீரன் வந்திருக்க வேண்டும். எதிரியா அல்லவா என்பதை உணர்ந்து கொள்வதற்காகத்தான் "பகை" என்றும் 'தூள்" என்றும் அடையாளச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். 'பகை' என்றதும் 'தூள்' என்று பதிலுக்குக் கூறிவிட்டால் தீவட்டிக்காரன் திரும்பி ஓடிப் போய் மற்றவர்களுக்கு ஆபத்தை விளக்குவான். அவர்கள் ஓடித் தப்பி விடுவார்கள். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று செழியன் யூகித்துக் கொண்டான்.

அருகே வந்த தீவட்டிக்காரன், மற்ற வீரர்களைப் பார்த்து, "என்ன வெற்றியா?" என்று கேட்டான்.

"இதோ வெற்றியின் அடையாளம்!" என்றனர் செழியனைச் சுட்டிக் காட்டியவாறு!

"ம்....கண்ணைக் கட்டுங்கள்!" என்று உத்திரவிட்டான் தீவட்டிக்காரன்.

செழியனின் கண்கள் கட்டப்பட்டன. "ஏன் என் கண்களைக் கட்டுகிறீர்கள்?" என்று ஆத்திரத்தோடு கேட்டான் செழியன்.

"இனிமேல் நீ இந்த உலகத்தைப் பார்க்க முடியாது சற்று முன்—கண் கட்டப் படுவதற்கு முன்—கடைசித் தடவையாகப் பார்த்தாயே; அதோடு சரி உனக்கும் உலகத்துப் பெருங் காட்சிகளுக்கும் உள்ள தொடர்பு!....ம் இழுத்து வாருங்கள் அவனை!" என்று தீவட்டிக்காரன் ஆணையிட்டு விட்டுக் குதிரையைத் திருப்பி விட்டான்.

விழிகளை இறுகக் கட்டிய நிலையில் செழியன் கல்லிலும் முள்ளிலும் கால்களை இடறிக்கொண்டு ரத்தங் கசியக் கசிய நடந்து சென்றான். அனைவரும் ஒரு ஏரிக் கரையோரமாக வந்து சேர்ந்தனர். காண்பவர் வியக்குமாறு அந்த நடுக் காட்டில் மரத்தால் அமைக்கப்பட்ட பல வீடுகள் இருந்தன. மாளிகை போன்ற தோற்றத்தில் ஒரு மர வீடு கம்

பீரமாக அமைந்திருந்தது. வீரர்கள் தங்குவதற்கேற்றவாறு நீண்ட பாசறையொன்று காணப்பட்டது. காட்டு மரங்களைவெட்டி ஒழுங்கான பலகைகளாகக்கூட அறுக்காமல் முழு மரங்களாகவே அடுக்கி அவசரத்தில் கட்டப்பட்டிருந்தன அந்த வீடுகள்.

மாளிகை போன்ற வீட்டுக்கு எதிரே காற்றோட்டமேயில்லாத ஒரு மர வீடு இருந்தது. அதற்கு அழுத்தமான கதவு மட்டுமே இருந்தது. கதவில் பெரிய பூட்டு ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த வீட்டின் முகப்பில் வெள்ளை வண்ணத்தால "சாவூருக்குப் போகும் வழி" என்று எழுதப்பட்டிருந்தது.

மாளிகை வீட்டின் பின்புறத்தில் சற்றுப் பொலிவு குறைந்த—ஆனல் மாளிகைத் தோற்றமேயுள்ள மற்றொரு வீடும் காணப்பட்டது. முன்மாளிகையில் அரசனும், பின்னுள்ள மாளிகையில் அரசாங்கத்துப் பெண்களும், அரசியும், இளவரசியும் தங்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை செழியன் புரிந்து கொண்டிருப்பான், அவனது கண்கள் கட்டப்படாமல் இருந்திருந்தால்!

கரிகால் சோழனிடம் தோற்றுவிட்ட இருங்கோவேள் எப்படியும் தன் பகையைத் தீர்த்துப் பழிவாங்கிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்தக் காட்டில் தனது தானாயகர்களோடும், அமைச்சர்களோடும், அரசியோடும், அரச குமரியோடும் மர மாளிகை அமைத்துத் தங்கியிருந்தான். மக்களில்லாமல் மாவீரர்களையும் மந்திரிப் பிரதானியரையும்மட்டுமே கொண்ட அவனது அரசு அந்தக் கானகத்தில் நடைபெற்று வந்தது. அங்கும் அவனுக்கு நிம்மதியில்லை. கரிகாலனைப பூமியில் வீழ்த்தும் வரை அவனுக்கு ஓய்வில்லை. வெறி பிடித்து அலைந்து கொண்டிருந்தான். அவன் கனவு பழுக்கப்போகும் நேரத்தில்தான் செழியன் குறுக்கிட்டுவிட்டான். அவன் ஆத்திரம் செழியன்மீது திரும்பிற்று. அதன் விளைவாகச் செழியனைச் சூழ்ச்சி செய்து, கொண்டு வந்துவிட்டார்கள் இருங்கோவேளின் வீரர்கள்.

மாளிகை வீட்டுக்குள்ளே செழியனை இழுத்துக் கொண்டு அந்த வீரர்கள் புகுந்தார்கள். மரத்தால் ஆன சிம்மாசனமும், அதைச் சுற்றி அறிவுரையாளர்கள் அமர்வதற்கேற்ற வசதியுடைய ஆசனங்களும் நிரம்பி அந்த மாளிகைக்கூடம் விசித்திரமாகக் காட்சி அளித்தது. செழியனை இழுத்துக்கொண்டு வந்த நேரத்தில் அந்தக் கூடத்தில் யாருமே இல்லை. ஆசனங்கள் மட்டுமே இருந்தன. அனைவரும் உள்ளே நுழைந்ததும் தெருக் கதவுகள் மூடப்பட்டன. கூடத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு மணியை தீவட்டிக்காரன் மெதுவாக அடித்தான். கூடத்து மூலையிலே ஒரு சிறிய கதவு 'கிரீச்' என்ற ஒலியுடன் திறந்தது. அந்த வழியாக ஒரு பெரியவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து தீவட்டி வெளிச்சத்திலே முகந் தூக்கிப் பார்த்தார். வயதேறியவர் என்றாலும் அவர் முகத்தில் முதுமையின் அருள் இல்லை. கொடிய இருள் படிந்திருந்தது.

"யாரது?" என்று வாயைப் பிளந்தார். அய்யோ பயங்கரம்! செவியைத் துளைக்கும் குரல்! சிறு குழந்தைகளைப் பயமுறுத்தும் 'பூச்சாண்டி'யைப் போலக் காணப்பட்ட அந்தக் கிழவரின் கிணற்றுக் கண்களுக்குத்தான் எவ்வளவு கூர்மையான பார்வை!

"அமைச்சர் அவர்களே! வணங்குகிறேன். இதோ செழியனைக் கொண்டுவந்துவிட்டார்கள்! என்று அந்தக் கிழவரைப் பார்த்துத் தீவட்டிக்காரன் மரியாதையாகக் கூறினன்.

"ஓகோ! அமைச்சரும் இருக்கிறார் போலும்." என்று செழியன் தீர்மானித்துக் கொண்டான்.

கிழ அமைச்சர் செழியனிடம் நெருங்கி வந்து அவன் முகத்தை ஏற இறங்கப் பார்த்தார். விகாரமாகச் சிரித்தார். "வில்லவனைக் கொன்ற வீரன் நீ தானே?" என்று பதைபதைப்புடன் கேட்டார். செழியன் மௌனமாக நின்ருன்.

"சோழனுக்காகப் பரிந்து கொண்டு எங்கள் வேளிர்குடியின் தளபதியைக் கொன்று போட்ட உனக்கு எத்தனை வகை வகையான சித்திரவதைகள் நடக்கப் போகின்றன பார்!" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்தினர். அந்தக் கூச்சலில் உறுதியிருந்தது. வார்த்தைகள் அழுத்தந் திருத்தமாக வெளிப்பட்டன. விழிகளைத் திறக்க முடியாத நிலையில் செழியன் பேசினன்.

"முதுகிழவர் மட்டுமல்ல; அமைச்சராக இருந்தவர் தாங்களே இப்படி வயதுக்குத் தர வேண்டிய பெருமையைக்கூடத் தாமல் வாய்க்கு வந்தவாறு பேசுதல் முறையல்ல என்பதை மட்டும் இந்தக் கண் கட்டிய காட்டில் கூறிட விரும்புகிறேன்" —எனக் கம்பீரமாகச் சொல்லிவிட்டு "மாண்டிட அஞ்சான், பாண்டிய நாட்டான்!" என உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் குமுறிக் கொந்தளித்து முழங்கினன்.

"செழியா! சிறுவனே! அமைச்சர் **செந்தலை**யாரிடம் பேசுகிறோம் என்பது நினைவிருக்கட்டும்!" எனத் தலையில் ஒரு தட்டு தட்டினன் தீவட்டிக்காரன்.

தலையில் அடி விழுந்ததுதான் தாமதம்; வேல்பட்ட வேங்கையானன் செழியன்! எரிமலையெனக் குமுறியெழுந்தான். தன்னைப் பிணைத்திருந்த சங்கிலியோடு சேர்த்து அதைப் பிடித்திருந்தவர்களைக் கீழே உருட்டினன். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் காட்டாற்று வெள்ளத்து நடுவே சிக்கிய ஆட்டுக் குட்டிகள்போல் விலங்குச் சங்கிலியைப் பிடித்திருந்த வீரர்கள் சிதறி விழுந்தனர்.

காலிலும் கையிலும் விலங்கு—கண்களோ கட்டப்பட்டிருக்கின்றன—ஆனலும் போரிடத் தயாராகி விட்டான். கண்கட்டை அவிழ்ப்பதற்காக விலங்குடன் கையைக் கொண்டு போனன். அதற்குள் ஒருவன் வாளோடு செழியனின்மீது பாய்ந்தான். அந்த வாளைச் செழியன் கைப்பற்றிக் கொண்டு பாய்ந்தவனைக் கீழே உருட்டினன். அதற்குள் பல வாள் முனைகள் அவனைச் சூழ்ந்தன. ஒலிக் குறிப்பை மட்டும் வைத்துக் கொண்டு விழிகளின் பார்வையற்ற நிலையில் அவன் நடத்திய போராட்டங் கண்டு அமைச்சர் செந்தலையாரும் அதிசயித்துப் போனர். அவனது வாள் வீச்சில் ஐந்தாறு வீரர்கள் காயம்பட்டு ஓடினர். ஆயினும் இறுதி வெற்றி அவன் பக்கம் இல்லை. இருங்கோவேளின் வீரர்களே வென்றனர். செழியன் மீண்டும் பலமாகக் கட்டப்பட்டான்.

அப்போது குதிரைகள் வரும் குளம்படியோசை கேட்டது; தெருக் கதவு திறக்கப்பட்டது. குதிரையிலிருந்து இறங்கியவர்கள் தளபதி வில்லவனின் பிணத்தை உள்ளே கொண்டு வந்தனர். ஒரே அமைதி! சோகம் திடீரெனக் கப்பிக் கொண்டது. வில்லவனின் வீர உருவத்தை நடுக் கூடத்திலே கொண்டு வந்து வைத்தார்கள். மந்திரியார் அந்த உருவத்தருகே சென்று தீவட்டியின் உதவியோடு குனிந்து பார்த்தார். அவர் முகம் மேலும் கொடூரமாக மாறியது.

"பகை! பகை! பகை!" என்று படிப்-டியாகக் குரலை உயர்த்தினர்.


சுற்றி நின்றவர்கள் "தூள்! தூள்! தூள்!" என ஒலிமுழக்கம் எழுப்பினர் ஆத்திரத்தோடு!

சற்று நேரம் அமைதி! குதிரை வீரர்களைப் பார்த்து அமைச்சர் கேட்டார், இன்னும் மன்னர் வரவில்லையா என்று!

"மன்னர் எங்களுக்குப் பின்னுல்தான் வந்தார். உடை மாற்றிக் கொள்வதற்காகப் போயிருக்கிறார்!" என்று பதிலுரைத்தான் வீரன்.

அதற்குள், முதலில் மந்திரி வந்த மூலைக் கதவுப பக்கமிருந்து தேர் அசைவது போல அசைந்து வந்தான மன்னன் இருங்கோவேள். வேளிர் குடி மன்னன் சிற்றரசனுக இருந்தாலும் அவன் கொலு மண்டபத்திற்கு வருவதென்றால் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். இன்று அவன் இருண்ட மர மாளிகையொன்றில் நிம்மதியற்ற நெஞ்சோடு சாகும்வரை மாருத ராஜநடை போட்டுப் பிரவேசித்த காட்சி அவனது வீரர்களின் உள்ளத்தைத் தொடாமல் இல்லை. அப்படித் தொட்டதினுல்தான் தங்கள் உயிரைத் திரணமாக மதித்து இருங்கோவேளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று அவனோடு சிரமங்களைத் தாங்கிக் கொண்டு வாழ்கிருர்கள். இருங்கோவேளின் பார்வை முதலில் வில்லவனின் உருவத்தின் மீதுதான் விழுந்தது. அருகே வந்து நின்றுன். அவன் கண்கள் நீரைப் பொழிந்தன. வீரர்களை நோக்கினன். அமைச்சர் உட்பட அனைவரும் தலைகுனிந்து நின்றனர்.

"எனக்காக — என் வாழ்வின் மேன்மைக்காக — நமக்காக — நமது நாட்டுக்காக — உயிரை மதியாமல் சென்ற வீரத் தளபதி வில்லவனின் பெருமைக்குரிய உடலுக்குத் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துவோம்."



22—5—59 அன்று திருக்குவளையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாவின் போது, வாழக்கரை திரு. ராசகோபால் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களுக்கு வெள்ளியாலான ஒரு வெற்றிலைப் பெட்டியை அன்பளிப்பாகத் தந்தார்.

இருங்கோவேள் சோகம் கப்பிய தொனியில் இந்த வார்த்தைகளை வெளியிட்டான். அவன் குரல் கம்மியது; விம்மி யழுதிருப்பான், மன்னனுக இல்லாவிட்டால்! எவ்வளவு சோகத்தோடு சொற்கள் புறப்பட்டதோ அதற்கு நேர்மாருன வேகத்தில் திடுமென வெடித்துக் கிளம்பினன்; "எங்கே வில்லவனைக் கொன்றவன்?" என்று.

"இதோ!" என்ருர் அமைச்சர்.

செழியனிடம் போய் அவனையே பார்த்தவாறு நின்ருன். பார்வையாலேயே அவன் ரத்தத்தை உறிஞ்சி விடுவது போல் காட்சி தந்தான். அவனையும் அறியாமல் அவன் கை, கட்டாரிக்குச் சென்றது; கையில் எடுத்துவிட்டான். கிழ அமைச்சர் அதைத் தடுத்துவிட்டார். இவ்வளவும் செழியனுக்குத் தெரியாது. அவன் ஏதோ சிந்தனையில் விழிகளைத் திறக்க முடியாமல் எதிரே நின்றிருந்தான்...

"செழியனைக் கொண்டுபோய் தக்க பாதுகாப்புடன் அடைத்து வையுங்கள்!" — கிழ அமைச்சர் உத்திரவு போட்டார். அமைச்சரின் உத்திரவில் ஏதாவது அர்த்தமிருக்கும் என எண்ணிக் கொண்டு இருங்கோவேள் தடை சொல்லாமல் இருந்து விட்டான். செழியன் இழுத்துச் செல்லப்பட்டான். விடியற்காலையிலேயே வில்லவனை அடக்கம் செய்து விட வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

"சாவூருக்குப் போகும் வழி!" என்று முகப்பில் எழுதப்பட்டுள்ள வீட்டின் கதவு திறக்கப்பட்டது. செழியன் உள்ளே இழுத்துச் செல்லப்பட்டான். ஆட்கள் நுழைந்ததும் அங்கு அடைந்து கிடந்த வௌவால்கள் அங்குமிங்கும் அலைமோதிப் பறந்தன. ஒரு பெரிய தூணில் செழியனின் கைகால் சங்கிலிகளைப் பிணைத்து அவன் நகர முடியாதபடிக் கட்டிப் போட்டனர். பிறகு அந்தப் பயங்கர வீட்டின் கதவு மூடப்பட்டது. வீட்டைச் சுற்றி ஆட்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

[தொடரும்]




அட்டைப் படம்:

"ரோமாபுரிப் பாண்டியன்" அடுத்த இதழ்த் தொடரில் வரும் ஒரு சுவையான நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறது.

ஜூன் 12-ம் தேதி முதல்

சென்னை, மற்றும் தென்னாடெங்கும்!



மாடர்ன் தியேட்டர்ஸ்

தலை கொடுத்தான் தம்பி

டைரக்ஷன்

T.R. சுந்தரம்.

கதை, வசனம்: முரசொலி மாறன் M.A






# மாறன் எழுதும் 'மரகதம்'!

கோவை பட்சிராஜா ஸ்டுடியோவில் தயாராகிக் கொண்டிருக்கிற 'மரகதம்' இப்போது முடியும் கட்டத்திற்கு வந்திருக்கிறது. ஆகஸ்டிலேயே படத்தை வெளிக் கொணர வேண்டும் என்பதற்காக பட்சிராஜா அதிபரும், படத்தின் டைரக்டருமான எஸ். எம். சீராமுலு நாயுடு பாடுபட்டு வருகிருர்.

"கருங்குயில் குன்றத்துக் கொலே" என்ற பழைய துப்பறியும் நவீனத்தை 'மரகத'மாக மாற்றியிருக்கிருர்தோழர் மாறன். திரைக்கு ஏற்ற வண்ணம் கதையில் மாற்றங்கள் பல செய்திருப்பதோடு, போற்றத்தக்க வகையில் வசனமும் அமைத்திருக்கிருர்.

சமீபத்தில் இதற்கான பாடல் ஒன்றைப் பதிவு செய்திருக்கிருர்கள். "காவிரி பாயும் கன்னித் தமிழ் நாடு; கலேஞர்களுக் கெல்லாம் தாய் வீடு" என்று துவங்கும் இந்தப் பாட்டுக்கு கவர்ச்சிகரமான முறையில் இசையமைத்திருக்கிருர், எஸ். எம். சுப்பையா அவர்கள்.

படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், பத்மினியும் பிரதம பாகத்தில் நடிக்கிருர்கள். மற்றும் சந்திரபாபு, ஓ. ஏ. கே. தேவர், டி. எஸ். துரைராஜ்— ஆகியோரும் நடிக்கிருர்கள்.

## 'மரகத'த்திற்குப் பின்..

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் 'மலேக் கள்ள'னுக்குப் பிறகு மீண்டும் பட்சிராஜா ஸ்டுடியோவில் நடிக்கப்போகிருர். 'மரகதம்' வெளியான பிறகு அதற்கான வேலேகள் துவங்கப்பட இருக்கின்றன. அப்படத்திற்கு தோழர் மு. கருணநிதி கதை வசனம் எழுத ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர். கதைக்கு என்ன பெயர் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லே. சீராமுலு நாயுடுவே இதையும் டைரக்ட் செய்யப்போகிருர்.

## ஏ. வி. எம்மில் இரு புதிய தமிழ்ப்படங்கள்!

மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்ற ஏ. வி எம். ஸ்டுடியோவில், சென்ற 6—6—59 அன்று மீண்டும் இரு புதிய தமிழ்த் திரைப் படங்களுக்கான ஆரம்ப வேலேகளைத் துவக்கினர்.

ஒன்று "களத்தூர் கண்ணம்மா' என்ற படமாகும். ஜாவர் சீதாராமன் கதை வசனம் அமைத்திருக்கின்ற இந்தப் படத்தை, டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்ய இருக்கிருர்.

அடுத்தது, பி. வி. என். புரொடக்ஷன்சாரின் பெயரிடப்படாத படமாகும். 'திலகம்' கதையை எழுதிய நாராயணசாமி கதை வசனம் எழுதுகின்ற இந்தப் படத்தை ரகுநாத் டைரக்ட் செய்கிருர். பாலாஜி, பி. எஸ். வீரப்பா, 'குல தெய்வம்' ராஜகோபால், தேவிகா, ராஜகுமாரி—ஆகியோர் நடிக்கின்ற இப்படத்தை மிகவும் குறுகிய காலத்தில் எடுத்து முடித்து விடுவார்களாம்!



மேகலாவின் 'குறவஞ்சி'யில் சிவாஜி கணேசனும், சாவித்திரியும்.



ஏ வி. எம்., குப்பி கர்னுடகா கூட்டுத் தயாரிப்பான "சகோதரி"யில் பாலாஜியும், ராஜசுலோசனவும் இப்படித் தோன்றுகிருர்கள்.

## தலேகொடுத்தான் தம்பி 12-ம் தேதி வருகிறது!

மாடர்ன் தியேட்டர்சாரின் மாபெரும் தயாரிப்பான "தலே கொடுத்தான் தம்பி" இம்மாதம் 12-ந் தேதி சென்னேயிலும், தமிழக மெங்கிலும் திரையிடப்படுகிறது. 'ஈன்றவளுக்கு இழுக்கு செய்தோரைப் பூண்டோடு ஒழிப்பேன்' என்று சீறி எழுகின்ற சிங்கத் தம்பி; அந்த சிங்கத்தின் கர்ஜனேயைச் சிங்காரத் தென்றலாக்கி வெற்றி காணும் அண்ணன்; இந்த இருவர் வாழ்க்கையிலும் புயலேக் கிளப்பி விடுகின்ற பூங்கொடி—இவர்களேப் பின்னிச் செல்கின்ற இந்தப் படத்தை டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்திருக்கிருர். மாறன் வசனம் அமைத்திருக்கிருர். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்., டி. கே. ராமச்சந்திரன், மனேகர், 'குலதெய்வம்' ராஜகோபால், மாலினி, தாம்பரம் லலிதா—முதலியோர் நடித்திருக்கின்றனர். விசுவநாதன்—ராமமூர்த்தி இசையமைத்துத் தந்திருக்கின்றனர்.

## தாகூரின் கதை

பிரபல வங்காள டைரக்டரான சத்யஜித் ராய், திரையுலகில் பரபரப்பூட்டும் செயல்களேச் செய்வதில் திறமை மிக்கவர். அவரது படங்களில் அநேகம் பரிசுகள் பெறுவதோடு, வெளி நாடுகளிலும் பாராட்டோடும், வரவேற்போடும் திரையிடப்படுகின்றன.

அவர்தான் அடுத்த படத்திற்கு ரவீந்திரநாத் தாகூரின் சிறந்த கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிருர். இந்தப் படத்தில் நடிப்பதற்கென்று இரு புதுமுகங்களே அவர் ஒப்பந்தம் செய்திருக்கிருர்.

## மற்றுமொரு புதிய சாதனே!

திரைப்பட உலகில் விஞ்ஞானம் வியக்கத்தக்க சாதனேகள் பலவற்றைச் செய்து காட்டியிருக்கிறது. ஊமைப் படமே ஒருகாலத்தில் மாபெரும் சாதனேயாகப் பாராட்டப்பட்டது. பிறகு அது பேசும் படமாக மாறியது. அதற்குப் பின்னுல் அதிலேயே கலர், கனபரிமாணம், சினிமாஸ்கோப்—என்றெல்லாம் வளர்ந்து விட்டது. இப்போது மற்றுமொரு புதிய சாதனே பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது.

ஒரே படத்தில் நான்கு மொழிகளேப் பதிய வைக்கும் புதிய ஒலிப்பதிவு சாதனம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். ஆங்கிலம், ஜெர்மன், இத்தாலி, பிரெஞ்சு — ஆகிய மொழிகளே இந்த இயந்திரம் ஒலிபரப்புகிறது. எந்த மொழி அவசியமோ அந்த மொழிக்கான பொத்தானே அமுக்கினுல், படத்துடன் அந்தக் குறிப்பிட்ட மொழியை மட்டும் கேட்கலாம்.

'பி. டி. எச். சவுண்ட் எக்யுப்மெண்ட் லிமிடெட்' என்ற நிறுவனத்தைச் சேர்ந்த பிரபல ஒலிப்பதிவாளர் ஒருவர் தயாரித்த இந்தக் கருவிக்கு இப்போது ஹாலிவுட்டிலிருந்தும் அழைப்புகள் பல வந்திருக்கின்றனவாம்.

லண்டனில் சென்ற மாதம் நடைபெற்ற அகில உலகப் புகைப்படக் கண்காட்சியில் மாதிரிக்காக வைத்திருந்த இந்த இயந்திரத்தை, 1,20,000 பேர் உபயோகித்துப் பார்த்தனராம்!

●●●

## நில் நண்பா...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

காங்: அந்த 45—37—எப்படி ஏற்பட்டது தெரியுமா?

தி. மு. க: மக்கள் ஓட்டுப்போட்டார்கள், 45 தி. மு. கழகத்தார் வெற்றிபெற! ஓட்டுப்போட மறுத்தார்கள், 63 காங்கிரஸ்காரர்களுக்கு!

காங்: அதுதான் இல்லை; அதைவிட 'இரகசியமான' காரணத்தை நமது நிதி மந்திரி சுப்பிரமணியம் சொன்னார், மகாநாட்டில்!

தி. மு. க: அதைவிட வேறு காரணம் என்ன இருக்கமுடியும்?

காங்: யாருக்கும் தெரியாது, இதுவரையில்! திடீர் என்று சொல்லி திகைக்க வைத்துவிட்டார், நமது கல்வி மந்திரி!

தி. மு. க: உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற இதைவிட வேறு என்னதான் காரணம்?

காங்: அதாவது, காங்கிரஸ்காரர்கள் வேண்டுமென்றே தோற்று விட்டார்களாம்!

தி. மு. க: என்னப்பா இது, புதிய குழப்பம்! வேண்டுமென்றே தோற்றுவிட்டார்களா? எதற்காகவாம்?

காங்: அதிலேதான் புதைந்து கிடக்கிறது, ஒரு மாபெரும் 'ராஜ ரகசியம்'! திராவிட முன்னேற்றக் கழகத்தாரை சோதிப்பதற்காகவேதான் இந்த ஏற்பாடு! வாய் கிழியப் பேசுகிறார்களே; மூன்று வருட காலத்தில் அவர்கள் என்ன செய்கிறார்கள பார்ப்போமே—என்று சோதிக்கவேதான், நகரசபையைக் கொடுத்ததாம்! பார்த்தாயா; எவ்வளவு அருமையான தந்திரம்! என்ன இருந்தாலும் சாணக்கியரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் சீடராக இருந்தவரல்லவா?

தி. மு. க: ஓகோ...சோதிப்பதற்காகத்தானா?

காங்: ஆமாம்; ஆமாம்! நீங்கள் எப்படி; உங்கள் அறிவு எப்படி; உங்கள் வேலை எப்படி; என்னென்ன செய்கிறீர்கள்—என்றெல்லாம் பார்க்கத்தான் ஒரு முறை தோற்றது காங்கிரஸ்! பார்த்தாயா தங்கமான ஜனநாயகப பண்பை! இல்லாவிட்டால் தோற்கக்கூடியதா என்ன, எங்கள் காங்கிரஸ்?

தி. மு. க: அடடா! இதுவல்லவோ ராமராஜ்ய லட்சணம்! எதிர்க் கட்சிகளையும் வரவேற்று நிர்வாகத்தில் அமர்த்துவது மகத்தான செயல்தான்!

காங்: வந்தாயா வழிக்கு? இனிமேல் காங்கிரஸ் தோற்றது செல்வாக்கு அற்றதால்தான்—என்று சொல்லிக் கேலி செய்ய மாட்டாயே?

தி. மு. க: ஆனாலும் தோழனே! சோதனைதான நடத்தினோம் என்று சொல்லுகிறவர்கள், தேர்தல் நேரத்திலே ஏன் கச்சை கட்டிக் களம் குதித்தார்கள்? ஏன் மாடோட்டி வந்து மக்களிடம் ஓட்டுப் பிச்சை கேட்டார்கள்?

காங்: அது...அது....

தி. மு. க: எங்கள் தகுதியை எடை போடத்தான் விரும்பினார்கள் என்றால் போட்டிருக்கலாமா தேர்தலில் போட்டி? "அன்புள்ள சென்னை நகர மக்களே! தி. மு. கழகத்தார் ஏதோ சாதித்து விடுவதாக கதைக்கிறார்கள்! அதையும் தான் பார்த்து விடுவோமே! ஆகவே, இந்த முறை நகரசபை நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்போம்! அவர்களின் நிர்வாக லட்சணத்தைப் பார்ப்போம்; தகுதியை கவனிப்போம்; சோதிப்போம்! ஆகவே காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடவில்லை!" என்று அறிக்கை விட்டிருக்க வேண்டாமா? 'வருக; வருக' என்று தொண்டாற்ற வருகின்ற தோழர்களை வரவேற்றிருக்க வேண்டாமா? அதை விட்டுவிட்டு வீட்டுக்கு வீடு சென்று ஓட்டு கேட்டாரல்லவா; இன்று இந்த விசித்திர விளக்கத்தைச் சொல்லுகிற மந்திரியார்....?

காங்: ஆமாம்; கேட்டார்! கேட்டார்! உண்மைதான்!

தி. மு. க: கேட்டிருக்கலாமா, அந்தக் கேடுகெட்டவர்கள்? தேர்தல் நேரத்திலே மோதினார்கள்! விட்டேனா பார் என்று வீம்பு பேசினார்கள்! 'ஒரு சீட்டும் கிடைக்காது' என்று உறுமினார்கள். "அவர்கள் பிரிவினைவாதிகள்! பிச்சைக்காரர்கள்!" என்று பட்டங் கட்டினார்கள்! "மாட்டுக்குஓட்டளிப்பீர்! மாபாவிகளை விரட்டியடிப்போம்" என்று மார் தட்டினார்கள்! உண்டா; இல்லையா?

காங்: ஆமாம்! நான்கூட அப்படித்தான பல மேடைகளில் பேசினேன்!

தி. மு. க: அப்போதெல்லாம் எங்கே போயிற்று 'சோதிக்கிறோம்' என்ற இந்த திடுக்கிடும் தீர்மானம்? "நகரசபை எங்களுக்கே சொந்தம்; அதில் நாச சக்தி ஏதும் புகவிட மாட்டோம்!" என்று புலம்பியவர்களின் வாயில் மண் திணித்தார்கள்; மக்கள்! முகத்திலே கரி பூசினார்கள்! மூக்கை அறுத்தார்கள்! முக்காடு சூட்டினார்கள்! மூலையிலே தள்ளிவிட்டார்கள்! ஆனால் இப்போது வருகின்றது இந்த விளக்கம், சோதிக்கத்தான் நிர்வாகத்தை விட்டுத் தந்தோம் என்று! இது சோதனையல்லதோழனே; வேதனையை மறைத்துக்கொள்வதற்குக் கண்டுபிடித்த மூடு திரை!

காங்: என்ன?...என்ன?

தி. மு. க: மக்கள் மத்தியிலே நடமாடுவதற்குத் தேர்ந்தெடுத்த வாகனம்! அறுபட்ட மூக்கிற்குப் பதிலாக பொறுத்தப்பட்ட 'பிளாஸ்டிக்' மூக்கு! குப்புற விழுந்த பிறகு மீசையிலே ஒட்டியிருப்பது மண் அல்ல; பூமிமாதா பூசிவிட்ட சந்தனம்—என்கிறார்கள், உங்களையும், இந்த நாட்டு மக்களையும் என்றென்றைக்கும் ஏமாற்றிக் கொண்டிருக்கலாம் என்ற துணிவோடு!

காங்: அப்படியானால் அமைச்சரின் பேச்சில் உண்மை இல்லை என்று சொல்கிறாய்?

தி. மு. க: உண்மை இருக்கிறது என்று என்னை ஒப்புக் கொள்ளச் சொல்கிறாயா? அப்படியானால் ஒப்புக் கொள்கிறேன்; அதோடு இன்றுமொரு யோசனையையும் சொல்லுகிறேன்!

காங்: என்ன? என்ன யோசனை அது?

தி. மு. க: அதுவும் சோதிக்கும் திட்டம்தான்!

காங்: அப்படியானால் எதைச் சோதிக்க வேண்டும்? நீ இவ்வளவு பேசிய பிறகும் என் இருதயம் நின்று போகாமல் இருக்கிறதே; 'ஏன் — என்ற சோதனையா?

தி. மு. க: இல்லை; இல்லை! நகரசபைக்குச் செல்வோம் என்றோம் நாங்கள்; உங்கள் மந்திரி சோதிக்க வேண்டுமென்பதற்காக ஒரு 'சான்ஸ்' கொடுத்தார்; இல்லையா?

காங்: அப்படித்தான் சொன்னார், கரகோஷத்திற்கிடையே!

தி. மு. க: இப்போது சென்னை சட்டசபையையே கேட்கிறோம்; செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகம் நடைபெற வேண்டும் என்கிறோம்; நல்லவை செய்வோம் என்கிறோம்! அதற்கும் ஒரு 'சான்ஸ்' தந்து பார்க்கட்டுமே, உங்கள் காங்கிரஸ்!

காங்: என்ன; என்ன? நீ என்ன சொல்கிறாய?

தி. மு. க: ஒரு முறை மந்திரி சபை அமைக்கிறோமே நாங்கள் என்கிறேன்! ஒரே முறை—ஐந்து வருட காலம் விட்டுப் பார்க்கட்டும்! மன்னிக்கவும்; அமைச்சருடைய பாஷையில் 'சோதித்து'ப் பார்க்கட்டும்! செய்வீர்களா?

காங்: முடியாது; முடியாது!

தி. மு. க: நீ மட்டுமென்ன; 'முடியாது' என்றுதான் முழங்குவார்கள் உங்களது அமைச்சர் குழுவினர்கூட! ஆனால் முடிவு விபரீதமாகி விடுகிறபோதுதான் முகாரி பாடுவார்கள்! பள்ளத்திலே தள்ளப்பட்ட பிறகுதான் பரிசோதிக்கச் செய்தோம் என்பார்கள், புராண காலத்து ரிஷி புங்கவர்களைப்போல! அன்புள்ள காங்கிரஸ் தோழனே! உங்கள் அரசியல் மகாநாட்டிலே இந்த அற்புதமான செய்தியை வெளியிட்ட அமைச்சரது வேஷப் பேச்சிலே உண்மை இருக்கிறது என்று கருதுகிறாய்?

காங்: பின் பொய் என்று நம்பச் சொல்கிறாய்?

தி. மு. க: நம்பித்தானே நீங்கள் இருக்கிறீர்கள்? அது தோற்றுப் போனோரின் புலம்பல்! அடிபட்டோரின் அவல ஓலம்! மக்களால் வெறுக்கப்பட்டோரின் 'மாயாஜால'ப் பேச்சு! ஆடடா....நண்பா, நில்லப்பா! எங்கே ஓடுகிறாய்?




## சோமநாதபுரத்துச்சிலை

பி.சி. கணேசன் பி.எஸ்ஸி.,பி.டி

கஜினி முகம்மது என்றாலே 'கொடூரத்தின் மொத்த உரு—கருணையற்ற கல் நெஞ்சக்காரன் — சிலைகளை உடைத்துத் தூளாக்கிய துன்மார்க்கன் — சித்திரப் பாவையரின் கற்பைச் சூறையாடிய போகப்புலி—என்றுதான் 'சரித்திரம்' நமக்கு அவனைப் படம் பிடித்துக் காட்டிற்று!

ஆனால் கஜினி முகம்மது நல்லவன்; கருணை உள்ளம் உண்டு அவனிடம், கற்பை மதிக்கும் நல்லெண்ணம் கொண்டவன்—என்னும் கஜினி முகம்மதுவின் நல்ல படத்தை கற்பனைத் தூரிகை மூலம் நமக்குத் தீட்டிக் காட்டுகிறார், பி. சி. கணேசன் இந்த 'சோமநாதபுரத்துச் சிலை' மூலம்!

இக்கதை 'முரசொலி'யில் வெளிவந்தது; எனவே இதை நாம் அதிகமாகப் பாராட்டுவது கூடாதெனினும் அழியாத பாத்திரங்களை உருவாக்கி மக்கள் மனதிலே நடமாட விட்ட இக் கதையாசிரியர் நம் பாராட்டுக்குரியவர்.

இரண்டு மத வெறிக் கூட்டங்களின் போராட்டத்திற்கிடையில் சிக்கித் தவிக்கும் கஜினி, புவனா, திலோத்தமா போன்ற பாத்திரங்கள் வாசகர்களின் மனதில் ஈரம் படிந்த அடிச் சுவட்டை அடிக்கடி ஏற்படுத்திக்கொண்டேயிருப்பன.

கதையின் முடிவு, கதைக்கே ஒரு முத்தாய்ப்பு; அருமையான முடிவு!

நல்ல ஓவியத்துடன் தனி நூலாக வெளிவந்துள்ள 'சோமநாதபுரத்துச் சிலை' வரலாற்றுக் கதைகளை படித்தின்புறுவோருக்கு ஒரு விருந்தாகும்!

[கிடைக்குமிடம்: இமயப் பதிப்பகம், நாகை. விலை. ரூ. 1—75: பக்கங்கள்:128.]

## நகைச்சுவை விருந்து

மாவண்ணா. தேவராசன்

நகைச்சுவை துன்பத்தை நீக்கும் அருமருந்து. அதை விருந்தாக்கித் தரும் பணியில் பற்பலர் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளனர். அதிலும் எழுத்து மூலமாக நகைச்சுவை உண்டாக்குவது என்பது மிகக் கடினமான செயல்.

இதை நிரூபிக்கிறது, இந்த நூல். ஆசிரியர் கூறும் நகைச்சுவை நிகழ்ச்சிகள் பல முன்பே வெளிவந்தவை. மேலும் சொற்களில் நகைச்சுவை ஒட்டம் குறைவாக இருக்கிற காரணத்தால் பெரும்பான்மையான நகைச்சுவை நிகழ்ச்சிகள் சிறிதும் சிரிப்பூட்ட முடியவில்லை.

ராஜா பீர்பால், தெனாலிராமன் கதைகளில் சில சுவையளிக்கின்றன; மூட்டைப்பூச்சி புராணம் கற்பனை வளம் மிகுந்திருக்கிறது.

இத்தகு கதைகளைத் தொகுத்துச் சேர்த்த ஆசிரியர், பகுத்தறிவுக் கொவ்வாத நிகழ்ச்சிகளைத் தள்ளி — நகைச்சுவை நடையை இன்னும் திறம்படக் கையாண்டிருந்தால் இந் நூல் அவருக்கும் இன்னும் முழு வெற்றியைத் தந்திருக்கலாம்.

[கிடைக்குமிடம்: குமரய்யன் பதிப்பகம், 8, துளசிங்கம் சந்து, சௌகார்பேட்டை, சென்னை–1. பக்கங்கள்:84. விலை ரூ. 1—25.]

## அமைச்சரவை கவனிக்குமா?

[“தாழ்த்தப்பட்ட மக்களைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்வோம்!” என்று வாய்ப்பறை யடிக்கிறார்கள், நம்மை ஆளவந்தவர்கள்! அவர்களது இழிவு துடைக்க வேண்டிய கடமைப் பணிகள் ஆயிரமாயிரம் இருந்தும், வேகத்தில் ஆமையோடு போட்டியிடுகின்ற அவல நிலையைத்தான் காண முடிகிறது!

“கோயிலுக்குள்ளே விட்டோமே; போதாதா?” — என்கிறார் ஓர் அமைச்சர்!

“சேரிவாழ் மக்களின் குடிசைகளில் வெள்ளிக் கோப்பைகளை நான் கண்டேனே!” என்கிறார், நிச்சயமாகக் கண்களைப்பெற்றிருக்கின்ற மற்றொரு அமைச்சர்!

ஆனாலும், அந்தப் பரிதாபத்திற்குரிய மக்களிடமிருந்து எழுகின்ற ஏக்கக் குரல் மட்டும் ஓயவில்லை; தேயவில்லை; வளர்ந்து கொண்டே போகிறது!

அத்தகைய வஞ்சிக்கப்பட்ட இனத்தினர், தங்கள் கண்ணீரைக் கொண்டு வரைந்திருக்கின்ற கடிதம் ஒன்றை நமது அமைச்சரவையின் கவனத்திற்கு வைக்கிறோம்.]

# ‘நல்லாடை’யில் ❊❊❊ கிழிசல்! ❊❊❊

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம்.

நல்லாடையிலே வசிக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் எழுதியது. [நல்லாடை, தஞ்சை மாவட்டத்தில், மாயூரம் வட்டத்தில் இருக்கும் 170-ம் எண்ணுள்ள கிராமம்.]

எங்கள் நலனுக்காக ஏதேதோ நடைபெறுவதாக நாங்கள் செய்தித் தாள்களில் படிக்கிறோம். ஆனால், எங்கள் வாழ்க்கைத் தரம் கடுகளவும் உயரவில்லை; அதோடு மட்டுமல்ல; எங்கள் மனப் புண் நாளும் பெரிதாகி வருகிறது; ‘மானத்தோடு வாழமுடியாதா’ என்ற ஏக்கக் குரல் மலை மோதும் எதிரொலியாய் வளருகிறது.

சமூகத்தில் இன்னும் நாங்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே—சண்டாளர்களாகவே வாழத்தான் வேண்டுமா? எங்களின் இழிநிலை துடைக்கப்பட வேறு மார்க்கமே இல்லையா? இருட்டறையில் அடைக்கப்பட்டு அவதியுறும் எங்களை ‘விடுவித்தோம்’ என்று வெளியேற்றி, மீளமுடியா படுகுழியில் அல்லவா தள்ளிவிடுகிறார்கள்!

உதாரணத்திற்குச் சிலவற்றை மட்டும் இங்கே தெரிவிக்கிறோம்.

* 1958-ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 3-ம் நாள் எங்கள் ஊருக்கு கனம் நிதி யமைச்சர் வருகை தந்தார். புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி ஒன்றைத் திறந்து வைத்த அவர், தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தனி இடத்தில் இருக்கின்ற பள்ளி ஒன்றையும் அதனுடன் இணைத்துவிடுவதாக உறுதியளித்துச் சென்றார். ஓராண்டு உருண்டோடி விட்டது; இதுவரை எந்த மாற்றமும் நிகழவில்லை. ஒதுக்கப்பட்டவர்களாக ஓரிடத்தில் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார்கள், சேரிவாழ் பாலகர்கள்! அமைச்சரின், உறுதிமொழி ஆற்று நீரிலே பொறிக்கப்பட்ட எழுத்துக்களாகிவிட்டன! அதோடுமட்டுமல்ல; ஏழை மாணவர்களுக்கு இதுவரை வழங்கிவந்த மதிய உணவும் நிறுத்தப்பட்டு விட்டது.

* தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற தேநீர் விடுதிகளில், இருபதாம் நூற்றாண்டில் நிகழக்கூடாத அக்கிரமம் ஒன்று நிகழ்கிறது. தாழ்த்தப்பட்ட இனத்தவரை வெளியில் வைத்து உணவு வழங்குகிறார்கள்; சமமான இடத்தைத் தர மறுக்கிறார்கள். இந்தக் கொடுமை குறித்து போலிசாருக்கு சிலர் தகவல் தெரிவித்தும்கூட, இந்தத் தகாத செயல் இன்னும் நடந்துகொண்டே இருக்கின்றது. இன்றுவரை அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்கிறபோது, எங்கள் உள்ளக் குமுறலைக் கொட்டுவதற்கு வேறு இடமே இல்லை!

* மேலும், இவ்வூர் அக்னீசுவர சுவாமிக்கு 100 ஏக்கருக்கு மேலாக நஞ்சையும், 100 ஏக்கருக்கு மேலாக புஞ்சை நிலம் இருக்கிறது. இந்த இரு பகுதி நிலங்களிலும் விளைபவை அத்தனையையும் இங்கிருக்கிற சில மிராசுதாரர்களே அனுபவிக்கிறார்கள். எங்களுக்குக் கடுகளவு உரிமை இல்லை!

* சேரிக்கும் இடுகாட்டுக்கும் இடையே வழிகூடக் கிடையாது. இறந்துபட்டோரைத் தூக்கிச் செல்லும் பாட்டையாக மிராசுதார்களின் வயல் வெளியைத்தான் பயன்படுத்துகிறோம். ஆனால், விளைச்சல் காலங்களின் அந்த வழியும் அடைக்கப்படுகிறது. மாண்ட பிறகுகூட இந்த மகானுபாவர்கள் ‘தீண்டத் தகாதவர்கள்’ என்ற கருத்திலேயே மதிப்பது எங்கள் இருதயத்தை வேல் கொண்டு தைக்கிறது!

— இத்தகைய இடர் மிக்க வாழ்வு நிலை குறித்து நாங்கள் எழுப்பிய கூக்குரல் இன்றுவரை மதிக்கப்பட்டதில்லை! நல்லாடையிலே வசிக்கின்ற எங்களுக்கு, நல்ல ஆடைகூட கிடைக்கிறது உடலைக் காக்க! ஆனால் மானத்தைக் காக்க உரிமை வழங்கப்படுவதில்லையே; என்ன செய்வது?

இப்படிக்கு,

நல்லாடை சேரிவாழ்வோர்
[36 கையொப்பங்கள்]

### பிறப்பு

***

தோழர் சிற்றுளி—சுப்பிரமணியம் அவர்களுடைய துணைவியாராகிய திருமதி லோகாம்பாள் அம்மையார், சென்ற 30—5—59 அன்று ஒரு பெண் மகவுக்குத் தாயானார்கள்—என்ற செய்தியறிந்து மகிழ்கிறோம்.

# ‘காதறுந்த செருப்பு’ம் கட்சிக்கு ஒரு பெயராகிறது!




அரசியல் கட்சிகளுக்கு எப்போதுமே மக்களிடத்தில் நல்ல செல்வாக்கு இருந்தாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் வலுக்கட்டாயமாக தங்கள் உள்ளத்தில் எதிர்ப்பை உண்டாக்கிக் கொள்வார்கள். ஆகவேதான் அவைகளைத் தாக்கவும், நடவடிக்கைகளைக் கண்டிக்கவும் பின்வாங்கார்.

ஆனால், இப்போது “விடுதலை” ஏடு, அப்படி எதிர்க்கும் முறையிலே புதிய பாணியையே புகுத்தியிருக்கிறது. பள்ளிக்கூடத்திலே மாணவர்கள் ஒருவருக்கொருவர் பெயர் சூட்டிக் கொள்வதைப்போல தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளுக்கும் பெயர்களைத் தந்திருக்கிறது!

“மனிதன் அரசியலில் நுழைவது எதற்காக? தனக்குப் பிடித்தமான கொள்கையைப் பரப்புவதற்காகவா? அல்லவே அல்ல. அரசியல் கட்சியில் புகுந்தால், பதவிக்கு ஆசைப்பட்டால், எவனாலும் கொள்கையைப் பரப்ப முடியாது என்பதும், வளைந்து கொடுத்தும் கால் வருடியும்தான் பதவியைப் பிடிக்க முடியும் என்பதும், எந்த அரசியல் கட்சிக்காரனுக்கும் தெரியும். ஆனாலும் ஏன் செய்கிறான் என்றால், அதன் மூலம் புகழும் பணமும் கிடைக்கும்; சுளுவான விளம்பரமும் கிடைக்கும்; ஒரு சமுதாயப் புரட்சி வீரனை மதிப்பதைவிட ஒரு நாலாந்தர கவுன்சிலரை, ஒரு தற்குறி எம். எல். ஏ. யை மிகுதியாக மதிக்கின்ற காலமல்லவா, இது? ஆதலால்தான் ஓட்டை, உடைசல், செம்பு, பித்தளை, தகரப்போணி, அறுந்த செருப்பு, உடைந்த சட்டி, வளைந்த ஊசி—எல்லாம் இன்று அரசியல் தலைவர்களாகவும், ஏதாவது ஒரு பதவியில் இருப்பவர்களாகவும் காட்சியளிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்...”

—இப்படி 4—6—59 ‘விடுதலை’ தலையங்கம் தீட்டி, தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் பெயர்களையும் வரிசையாகக் கீழே தந்திருக்கிறது:

“காங்கிரஸ், கம்யூனிஸ்ட், கண்ணீர்த்துளி, காங்கிரஸ் கண்ணீர்த்துளி, சோஷ்யலிஸ்ட், பிரஜா சோஷ்யலிஸ்ட், ஃபார்வர்டு பிளாக், குடியரசுக் கட்சி”

— முதல் பாராவிலே எட்டு ‘சிறப்புப் பட்ட’ங்களையும், கீழே எட்டு அரசியல் கட்சிகளையும் வரிசையாகத் தந்திருக்கிறது ‘விடுதலை’ ஏடு. வாசக நண்பர்கள் அந்தப் பெயர்களை, அரசியல் கட்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே வரிசையாகத் தந்திருக்கிறது, அது!

| | | | |
|---|---|---|---|
| 1. | காங்கிரஸ் | — | “ஓட்டை” |
| 2. | கம்யூனிஸ்ட் | — | “உடைசல்” |
| 3. | கண்ணீர்த்துளி | — | “செம்பு” |
| 4. | காங்கிரஸ் கண்ணீர்த்துளி | — | “பித்தளை” |
| 5. | சோஷ்யலிஸ்ட் | — | “தகரப்போணி” |
| 6. | பிரஜா சோஷ்யலிஸ்ட் | — | “அறுந்த செருப்பு” |
| 7. | ஃபார்வர்டு பிளாக் | — | “உடைந்த சட்டி” |
| 8. | குடிஅரசுக் கட்சி | — | “வளைந்த ஊசி” |

அந்தோ பரிதாபம்! எதிர்ப்புகளை எந்தெந்த ரூபத்திலேயோ பெற்றிருக்கின்ற அரசியல் கட்சிகள், திராவிடர் கழகம் என்ற அரசியல் கட்சியின் இத்தகைய ‘கண்ணியமான’ எதிர்ப்பைப்போல் இதுவரை எங்குமே சந்தித்திருக்கவே முடியாது!

அறுந்த செருப்பும், உடைந்த சட்டியும், தகரப் போணியும் வீட்டுக்குள்ளேயே கிடக்க வேண்டிய அவசியமில்லை; எழுத்துருப் பெறலாம் — எதிர்க்கவும் பயன்படலாம் — என்பதை இப்போதுதான் உணருகிறோம்!

ஆனாலும், நாம் பிழைத்தோம் — பெரியாருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் என்ன புதிய பற்றுதல் ஏற்பட்டிருக்கிறதோ; நமக்குத் தெரியவில்லை...

“கண்ணீர்த்துளி - செப்பு”

— என்பதோடு நிறுத்திக் கொண்டுவிட்டார்!

# சுழல் விளக்கு

மாலுமி

சே. அருணகிரி; சென்னை-1.

(?) "ரோமாபுரிப் பாண்டியன்" தொடர்கதை இன்னும் அதிகமாக வெளியிட்டால் என்ன?

உங்களைப்போல் அநேகர் இந்தக் கருத்தை எழுதியிருக்கிறார்கள். விரைவில் வாரந்தோறும் மூன்று பக்கங்களில் கதையை வெளியிட முயற்சி செய்கிறோம்.

பி. எஸ். சின்னச்சாமி; போடி.

(?) சில சமயங்களில் இந்திரா காந்தி தன் தந்தை தனக்கு எழுதிய கருத்துக்களை மறந்துவிட்டுப் பேசுகிறாரே; ஏன்?

எழுதியவரே தான் எழுதியவைகளை மறந்துவிட்டாரே; படித்தவரைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

பி. கோவிந்தசாமி; செஞ்சி.

(?) காமராசருக்குத் திருமணமாகியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

தனக்குப் பின்னால் ஒரு வாரிசைத் தயார் செய்து விட்டோம் என்ற திருப்தி அவருக்கு ஏற்பட்டிருக்கும்!

ஜி. பத்பனாப்பன்; சென்னை-7.

(?) மாஜி நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

'முந்திரா ஊழலு'க்காகத் தான் மட்டும் ராஜினமா செய்துவிட்டோமே; சம்மந்தப்பட்ட மற்றவர்களை இந்த சர்க்கார் என்ன செய்கிறது பார்க்கலாம்—என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்.

ஜி. ராஜப்பா; பெங்களூர்.

(?) "கடவுளுக்குப் பயப்படமாட்டேன்" என்று மார்தட்டும் நேரு, கடவுளுக்குப் பயந்து திரியும் சாதுக்களின் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கலாமா?

அவர் கடவுளுக்குப் பயப்படுவதில்லை; ஆனால் சாதுக்களுக்குப் பயப்படுகிறாரே!

எஸ். செல்வம்; பூண்டி.

(?) சட்டசபை ஊட்டிக்குச் செல்வதை எதிர்த்த தி. மு. கழகத்தின் மேயர் அ. பொ. அரசு, உதகையிலே நடக்க இருக்கிற மேயர்கள் மகாநாட்டுக்கு மட்டும் போகலாமா?

சட்டசபை ஊட்டிக்குச் செல்கிறது என்றால், அதைத் தொடர்ந்து நீண்ட பட்டியல் ஒன்றே உண்டு தோழரே! அமைச்சர்கள், அவர்களின் உதவியாளர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் — இப்படி எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க; அதனால் ஆகின்ற செலவும் அதிகம்தானே! ஆனால், நகரசபைத் தலைவரும் துணைத் தலைவரும் மாநாட்டில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்றால், நகரசபை உறுப்பினர்கள் அத்தனை பேரும் உடன் செல்லவில்லை; நகரசபையையே உதகையில் கூட்டவில்லை!

மேலும், அந்த மாநாட்டில் இந்திய உபகண்டத்திலுள்ள 17 கார்ப்பரேஷன்களின் மேயர்கள் கலந்து கொள்கிறார்கள்; விவாதிக்கப் போகிறார்கள். அதை சென்னையில்தான் கூட்ட வேண்டும் என்று சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. இடம் பற்றி முடிவு செய்வதும் சென்னை மேயரின் கையில் இல்லை! ஆனால், சட்ட சபையின் கதை அப்படியல்ல என்பது உங்களுக்குத் தெரியாதா? 5 இலட்சங்கள் கொடுத்து 'ஆரன்மூர்' அரண்மனை வாங்குவதும், மேலும் பல ஆயிரங்கள் செலவு செய்து அங்கே கூட்டம் நடத்துவதும் நமது அமைச்சர்களின் விருப்பத்தைப் பொறுத்ததுதானே!

பி. மலையசன்; சென்னை-1

(?) இந்திய ரயில்வேயின் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே போகிறதாமே....?

வருமானம் மட்டும் அதிகமாகவில்லை தோழரே! 1956—57 நடைபெற்ற ரயில் விபத்துக் 13,987 தான்! ஆனால் 1957—58—ல் அது 15,397 ஆக உயர்ந்துவிட்டது!


ஜுலை முதல் நாள் வெளிவரும் மாத இதழ்!

இலக்கிய மணம், கருத்து நிறைந்த சிறுகதைச் செல்வம், விஞ்ஞானம், ஆராய்ச்சி, கலைச் சிறப்பு. நெடுங்கதை இவற்றுடன் வெளிவருகிறது.

அவ்வை

ஆசிரியர்: பால்வண்ணன்

விலை 50 காசுகள்

எங்கும் முன்பணம் அனுப்பும் ஏஜண்டுகள் தேவை.

அவ்வை, 1—33, கலவச் செட்டித் தெரு, சென்னை—2.


## திருச்சி மாவட்ட
## தி. மு. கழக
## 3-வது மாநாடு

1959 ஜுன் 20, 21 சனி, ஞாயிறு நாட்களில் துறையூரில் நடைபெறும்.

| தலைவர்: | திறப்பாளர்: |
| --- | --- |
| 'சிந்தனைச் சிற்பி' | 'முரசொலி' |
| சி. பி. சிற்றரசு | மாறன் எம். ஏ. |

**அறிஞர் அண்ணா,**

பொதுச்செயலாளர்

**நாவலர் நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

20—6—59 இரவு

கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்களுடன்

முரசு நாடக மன்றத்தார் நடிக்கும்

'உதயசூரியன்' நாடகம் நடைபெறும்.

இசை நிகழ்ச்சிகளும் உண்டு.

நன்கொடை இருநாட்களும் ரூ. 10, 5, 2. பெண்கள் ரூ. 1.

—வரவேற்புக் குழு

## டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

★

மறைந்த தமிழ்த்தாய் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் பெயரில், பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவுவதற்கு அமைக்கப்பட்டிருந்த செயற்குழுக் கூட்டம், சென்ற 6—6—59 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு, சென்னை 'பிரம்ம சமாஜ மண்டப'த்தில் கூடியது. கூட்டத்திற்கு டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் (முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) தலைமை வகித்தார்.

அப்போது, டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் பள்ளியை உருவாக்க கீழ்க்கண்ட கமிட்டி உருவாக்கப்பட்டது:

அறிஞர் அண்ணா, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், திரு. ஏ. கே. தங்கவேலர்—ஆகியவர்களைக் காப்பாளர்களாகத் தேர்ந்தெடுத்தனர்.

திரு. டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் அவர்கள் தலைவராகவும், நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு. டாக்டர் பி. நடேசன், தோழியர் வெற்றிச் செல்வி அன்பழகன், திரு. டாக்டர் ரத்தினவேலு சுப்ரமணியம்-ஆகியவர்கள் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் செயலாளராகவும், திரு. சிறுவை மோகனசுந்தரம், சுந்தரி அன்புக் கணபதி—இருவரும் துணைச் செயலாளர்களாகவும், தோழியர் அலமேலு அப்பாதுரை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாளர்கள் மயிலை சிவமுத்து, சி. என். மீனாட்சிசுந்தரம், டி. சண்முகம், டபிள்யூ. கே. தேவராஜன், அ. கிருஷ்ணமூர்த்தி, என். வி. நடராஜன், கவிஞர் கண்ணதாசன், கலைஞர் மு. கருணாநிதி, சி. எஸ். நடேசன், ஜி. எம். சமரசம், எம். எம். தண்டபாணி தேசிகர், எஸ். எஸ். இராஜேந்திரன், திருமதி கண்ணம்மாள் நடேசன்—ஆகியவர்களைக் கொண்ட நிதிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

மேலும் கட்டிடத்திற்கு இடம் பார்க்க ஒரு துணைக் குழுவும், பொருள் வசூல் செய்ய ஒரு துணைக் குழுவும் நியமிக்கப்பட்டது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.